தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲கூ௯௨	மலர்
	பிலவ, ஆவணி.	
௩௭	1961 ஆகஸ்ட், செப்டம்பர்.	௫

இலக்கியம் கற்பதன் பயன்

தி. நா. அறிவு ஒளி

இலக்கியத்தின் பயன் என்ன?

அரசியலாலும் சட்ட திட்டங்களாலும், ஒறுப்புகளாலும், ஆற்றலினாலும், மருட்டலினாலும் செய்யமுடியாத—உண்டாக்க முடியாத—மனமலர்ச்சியை—உணர்வுப் பண்பாட்டை—அறிவுத் தெளிவை—வாழ்க்கை ஒளியை—இன்பச் செம்மையை இலக்கியம் (கலை) அருள்கிறது.

ஒரு மன்பதையின் வாழ்வையும் வளர்ச்சியையும் அமைதியையும் ஆக்கத்தையும் அந்நாட்டில் மிளிரும் நல்லாற்றல் மிக்கக் கலைகளும் இலக்கியங்களுமே ஆக்கியளிக்கின்றன. மன்பதையின் மடமை—அறியாமை—நோய்மை—பாழ்மை ஆகியவைகளை அறவே களைந்து சீர்திருத்தம் செய்வது கலை—இலக்கியங்களின் தலையாய தனிப்பெருங் கடமையாகும். கொடுமையும் வற்புறுத்தலும் கூடிய சீர்திருத்தம் பயனற்றது; பயன் விளைப்பதுமில்லை. உள்ளத்தின் ஆழத்திலேயே இயற்கையாக வேர்விட்டு வளர்ந்து செழிக்கும் இயற்கைச் சீர்திருத்தமே உண்மைச் சீர்திருத்தம். இதுவே நீடுழி வாழ்ந்து வெல்லும் ஆற்றல் சான்றது. இனிமை கனிந்த மென்மை சான்ற ஆழ்ந்த 'வளரும் சீர்திருத்தத்தை' உண்டாக்காத எழுத்து உயரிய இலக்கியம் ஆகாது.

தன்னை உண்மையாக உணரவும், பிறரைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் உண்மை இலக்கியம் உதவுகிறது.

வாழ்வில் பலரைப் பார்க்கிறோம்; சிலரிடம் பேசுகிறோம்; குறிப்பிட்டவர்களோடு பழகுகிறோம்; ஓரிருவரோடு தான் உள்ளம் ஒன்றுபட்டு அன்பால் இணைகிறோம். எப்போதும்

உடலோடு உடனிணைந்துறையும் உயிர்போல ஒன்றிப் பழகி யவர் ஓரிருவரே அமைகின்றனர். சிலபோர்து அணிந்து பின் கழற்றிவிடக் கூடிய ஆடை போன்றவர் சிலராகப் பழகுகின் றனர். நம்மோடு இணைந்து இருந்தாலும் நம்க்கே துன்பம் சூழும் கொடிய நோய்போன்ற சிலர் பழகுகின்றனர். 'பொருளை'ப் போல வந்து வந்து ஓடிவிடுபவரும் பயில்கின் றனர்... இவ்வாறு பலவகை உறவு நிலை நம்மை அடுத்தவர் களோடு நமக்கு அமைகிறது.

இவற்றுக்கெல்லாம் காரணங்கள் இருக்கலாம்; அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஆனால், இந்நிலைகளை ஆராய்ந் தறிய வேண்டிய இன்றியமையாமையும் நமக்கு உண்டு.

வாழ்க்கை ஆராய்ச்சியின் வடித்த பிழிவே கலையும் இலக் கியமும் ஆகும். ஆகவே வாழ்வைப் பல நோக்கில் ஆராய்ந்து திறன் தெளிதல் இலக்கியத்தின் கடமையாம்.

மனிதரின் இயல்பை மற்றவர் தத்தம் தன்னலத்திற்கு ஏற்பவே மதிப்பீடு செய்கின்றனர். வேண்டியவர் என்போரை அன்புடையோர் போற்றுவர்; மதித்து உதவி மகிழ்வர். வேண்டாதவரைத் தூற்றுவர்; பகைத்துத் துன்புறுத்துவர். இவை மாந்தரியல் பின் நாள் வழக்காக உளது. ஆயின், இலக்கியமோ—கலையோ—மக்களின் குறிப்பிட்ட பகுதியை மட்டும் பெரிதாக்கிக் காட்டாமல், அனைத்து நிலையிலும் ஆராய்ந்து நடுநிலையோடு நேர்மைத் தீர்ப்பளிக்கிறது.

மக்களோடு பழகப் பழகவே மக்களின் இயற்கை நுண் மைகள்—இயல்புகள்—பண்புகள் புலனாகும். உலகியல்பில் எத்துணையோ பேரை நாம் புரிந்து கொள்ளாமலிருக்கிறோம். அனைவரையும் புரிந்துகொள்ள வேண்டியது நனி இன்றியமை யாத 'வாழ்வுக் கல்வி'யாகும். எவ்வளவு மிகுதியாக மக்களைப் புரிந்து கொள்கிறோமோ; அவ்வளவுக்கு உள்ளப் பண்பாடு சிறப்புறும்.

மக்களிற் பலர், சிலரோடு பழகியமையை வைத்து, அனைத்து மாந்தரையும் அளந்து விட்டதாக எண்ணுகின்றனர். சிலரியல்பை அடிப்படையாகக் கொண்டு, அனைத்துலக ஆட வர்—பெண்டிரை ஆராய்ந்து தெளிந்து விட்டதாகச் செருக்கு வர். இத் தம்மியல்புக்கு அரணாகப், 'பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!' என்றும் கூறுவர். இத் தீர்ப்பு ஒரு பாற் கோடியதேயாம். நிறையறிவினர்க்கு அறிதற்கரியதான அனைத்து மாந்தரின் இயல்பு—பண்பு ஓட்டம்—மனநிலை ஆகிய வற்றைச் சிலர் பழக்கம் கொண்டு தெளிய முனைதல் பிழைபாடு தருவதாகும். இத்தகு ஆகா முயற்சியால் விளையும் கருத்தை

நம்பி வாழ்வதும் நன்மை பயவாததே. ஆகவேதான் மாந் —பலரோடு பழக' இயலாவிடினும்—நூல் வாயிலாக உலகி னரை ஆராய முற்படவேண்டும் என்பர் அறிவுடையோர். இந்நூலறிவு 'உலகியல் ஒழுக்கத்துக்கு ஊற்றுக்கோலாய் உதவும். ஆயின், நூலறிவு ஒன்றினையே நம்பி, உலகியலறி வைப் புறக்கணிப்பதும் கூடாது. இதனால் தான்,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்" (637)

எனப் பொய்யாமொழியார் கூறியருளினர். 'நூலறிவால் செய்யும் திறனிருந்தாலும் நிகழ்கால உலக இயற்கையை ஆராய்ந்தறிந்து அதற்கேற்பப் பொருத்தமாக வினைகளைச் செய்ய வேண்டும்' என்ற கருத்து உன்னற்குரியது. இந்த அறிவுவளம் மட்டும் அமைந்தால் போதுமா? இயற்கையாகவே அமைந்த நுண்ணறிவும் வேண்டும் என்பார் குறட்புலவர்.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை" (636)

ஆகவே நூலறிவு, நுண்ணறிவு, உலக அறிவு மூன்றும் அமைந்து விடின் இதனைவிட நுண்ணிய பெறற்கரியபேறு வேறுயா துளது?

இவ்வகையிலெல்லாம் வாழ்க்கைக்கு உதவும் அறிவு வளனை இலக்கியமும், கலையுமே நமக்கு மிக எளிதில் பிழிந் தெடுத்து வடித்தளிக்கின்றன.

கோடிக்கணக்கான ஆண்டுகளாக உலகில் 'மாந்தர் இன' வாழ்க்கை வரலாறு வளர்ந்து வருகிறது. ஆயினும், வாழ்க் கைச் சிக்கல் மட்டும் புதிது புதிதாக முளைத்துக் கிளைத்து வருதலைக் காண்கிறோம். இதற்கும் அடிப்படைக் காரணம் உள்ளப் பண்பாடும், கலை நாகரிகமும் சால்புணர்வும் மக்களின் உள்ளத்தில் ஊறி வேர்க்கொள்ளாமையே. இனைய பூசல்களை யும்,முரண்களையும் உள்ளபடி திறனாய்ந்து உரைப்பது இலக் கியத்தின் கடமையாக உள்ளது. அத்தகு இலக்கியங்களை உணர்ந்தவர்களின் வாழ்வில் சூழும் சிக்கல்களைத் தக்க வகை ஓதியில் விலக்கித் தோல்வியும் துன்பமும் நேராவண்ணம் வாழ முடியும்.

வாழ்க்கையில் தெரிந்தோ, தெரியாமலோ சூழும் குறை களை எடுத்துக்காட்டி அதற்குத்தக்க மருந்தளிப்பது இலக்கி யத்தின் இயல்பு. 'குறைகள்' என்ன என்று ஆராய்ந்து அறிந்தால்; அதைக்களையும் வழியையும் முறையையும் எளிதில் அறியலாம். அறிந்து அதன்படி நடந்தால் குறைகளை

நீக்கி 'நிறைவாழ்வு' அடைய முடியும். குறைகளுக்கு முற்றுப் புள்ளி இடவேண்டும் என்ற துணிவு மக்களுக்கு உண்டாக வேண்டும் என்ற ஆர்வத்தையும் நல்ல இலக்கியங்களே தூண்டி விடுகின்றன. விழிப்புள்ள உள்ளச் சான்றே உருவாக்கி வளர்ப்பது சீரிய இலக்கியத்தின் தலைசிறந்த நோக்கமாம்.

வாழ்க்கையைத் திறனாய்வது நல்லிலக்கியம். எந்தத் திறனாய்வுக்கும் ஒரு நன்முடிவு அமையும். அவ்வாறு வாழ்க்கையின் கண் காணப்படும் நல்ல உண்மைகளை இலக்கியம் தெரிந்தெடுத்து இலக்கியத்தின் வாயிலாக நம்முள்ளத்தில் ஆழ ஊன்றி நட்டுவிடுகிறது. அக்கருத்துக்கள் வளர்ந்து செழித்து நடைமுறை வாழ்வில் பூத்துக் காய்த்து கனிந்து பயன் நல்குகிறது.

நம்முடைய உண்மை முகத்தை நாம் விரும்பிச் சுவைப்பதைவிட, நம் நிழற்படத்தை விரும்பிப் பார்த்து மகிழ்கிறோம். இம் மக்களியல்பு ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு வகையில் நிழலாடுகிறது. அதனால், தான் வாழ்க்கையை இலக்கியமாக வடித்து அதைக்கண்டு, மகிழ மாந்தர் முயல்கின்றனர். ஆனால், இலக்கியம் வாழ்க்கையின் வெறும் படப்பிடிப்போ; எதிரொலியோ மட்டுமல்ல. வாழ்க்கை அடிப்படையில் வளர்ந்து சிறந்த ஒண்மை ஓவியமாகும். இதுதான் இலக்கியத்தினிடம் இருக்கும் தனிச் சீர்மை. இதனால்தான் வாழ்க்கையை வெறுப்பவர்களும்; வாழ்வில் வெறுப்படைபவர்களும், சோர்கின்றவர்களும் இலக்கியத்தைக் காதலிக்கின்றனர்; போற்றுகின்றனர்; வழிபடுகின்றனர்,

மக்களின் எண்ணங்கள், பேச்சுக்கள், செயல்கள் நிலையானவையல்ல; அடிக்கடி மாறிக் கொண்டிருப்பவை. காலம், இடம், சூழ்நிலை, மக்கள் மனப்பான்மை, அறிவுவளர்ச்சி, உணர்வு அமைப்பு, ஆகியவைகளுக்கு ஏற்ப மன—மொழி—மெய்களின் செயற்பாடு மாற்றங்களை அடைகிறது. இவ்வுண்மையை இந்நூல்கள் தெளிவாகக் காட்டி, அதற்கிசைய மனச்சீர்மையை உருவாக்குகின்றன.

இலக்கியம் உருவாக அடிப்படையாக வேண்டியது 'அடைவு' ஆகும். ஆகவே ஒரு நூலைப் படித்தபின், அதை எழுதியவரின் 'அடைவைக்' கற்போரும் அடைந்து ஒருவகைத் தெளிவு பெறுவர். இத்தகைய அடைவே இலக்கியம் தரும் பெரும் பயனாகும். ஒரு நூலைப் பொழுது போக்குக்காகக் கற்பதில் இந்த 'அடைவு' ஏற்படாது. அதைவிட நூலைப் படிக்காமலிருப்பதே நலமாகும்.

வாழ்க்கையின் சோர்வுகளை—அழுக்குகளை—நீக்கி, நல்ல ஆர்வத்தைப் புத்துணர்ச்சியை-அகப்பண்பாட்டை இலக்

கியம் (கலை) நல்கி விறுவிறுப்போடு வாழத்தூண்டுகிறது. வாழ்வின் எழுச்சிக்கும், மன்பதைத் மறுமலர்ச்சிக்கும் இவ்வகையில் இலக்கியம் செய்யும் தொண்டுக்கு இணையான தொண்டு வேறில்லை.

இத்தகைய அரும்பயனுக்குரிய இலக்கியத்தை மனப் பாடமாகும் வண்ணம் பயிலவேண்டியது மக்களுக்குரியகடமை யாகும், அடுத்தடுத்துப் படிப்பதே இலக்கிய அறிவு பெறு வதற்குறிய வழியாகும். படிக்கப் படிக்க இலக்கியத்தின் சுவை முதிர்ந்து கொண்டே செல்லும்.

கரி எழுதுகோலால் (Pencil) ஒரு கோடு வரைகிறோம். பின்னும் பலமுறை அதே கோட்டின்மீது மையழுந்த வரைகிறோம். முதன் முறைக் கோட்டை விடப் பலமுறை வரைந்த பின் அமையும் கோடு அழுத்தமான நிறமும், விரைவில் அழியாத தன்மையும் அடையும். மேலும் மேலும் விடாமல் ஒரு செயலையே அடுத்தடுத்துச் செய்தால், அச்செயல் தெளிவும், ஒளியும், திட்பமும், கவர்ச்சியும் பெற்றுப் பொலியும். அதுபோலவே பண்பாடும் பழகப் பழகப், பயிற்றப் பயிற்ற, இயற்ற இயற்ற, எழிலும்—ஒளியும்—உறுதியும் பெறும். ஆக்கமும் ஆர்வமும் அமையும். இனைய உயரிய பண்பாட்டை உள்ளம் பெற, இலக்கியப் பயிற்சி ஆழ்ந்ததாக அமைய வேண்டும். உள்ளத்தின் பேராற்றலையும், அறிவின் முனைப்பையும் 'இலக்கிய வழிபாடு' தூண்டி வளர்க்கும்.

'அறம்—பொருள்—இன்பம், வீடு அடைவது நூற்பயன்' என்று தொல்காப்பியரும், பிறரும் கூறுவர். 'மனக்கோட்டம் தீர்ப்பது நூல் என நன்னூலார் கூறுவர். இவ்வரும் பயன்கள் மட்டுமன்றி, ஒரு நாட்டின் கலையொழுக்கத்தையும், எண்ண வளத்தையும், பண்பாட்டு, நாகரிக வளர்ச்சியையும் அனைத் துலகத்துக்கும் அறிவிப்பது நாட்டு நல்லிலக்கியமே ஆகும். இலக்கிய அறிவு எல்லா நாடுகளிடையிலும் பரவலாகவும், ஆழ்ந்த முறையிலும் பரப்பப்பட்டால் ;-அவ்வந் நாட்டு மக்களியல்பு-மனவியல்புகளை அனைத்து நாட்டினரும் அறிவதால்-உலகப்பொது மனித உணர்வு' வளரும்.

உலக உணர்வை வளர்ப்பதற்கு சீரிய அறிஞர் பெரு மக்களின் இலக்கியங்கள் செய்யும் உதவியை வேறு எதுவும் செய்துவிட முடியாது.

ஒரு நாட்டு மக்களை அரசியல்-பொருளியல்-முதலியன காரணமாகப் பகைத்தாலும்; அந்நாட்டு இலக்கியங்களையோ; அந்நாட்டு இலக்கிய மாந்தர்களையோ (கதைப் பண்யோவி யங்கள்) அந்நூற்களை அரிதின்முயன்று பெற்றெடுத்துத்தந்த சான்றோர் புலவர்களையோ யாரும் பகைப்பதோ; வெறுப்

சென்ற இதழின் தொடர்ச்சி:

சங்கரத்தின் சாரம்

சாலை இளந்திரையன், எம். ஏ., எம். லிட்.,

அறிவுத்தெளிவு, அறவேட்கையை ஊட்டுகின்றது: அறஞ் செய்தற்கான தெம்பையும் தருகிறது. அந்த அறத்தை எப்படித்தான் செய்வது? அதற்கும் வழி சொல்லுகிறார் முனைப்பாடியார்.

"இன்சொல் விளைநிலனா, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருஅட்டி
அன்புநீர் பாய்ச்சி, அறக் கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

அறப்பெரு வாழ்வுக்கு வேண்டியனவும் வேண்டாதனவும் இப்பாட்டில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. இன்சொல், ஈகை, வாய்மை, அன்பு என்னும் நற்பண்புகள் இருந்து விட்டால் வாழ்க்கை என்னும் பயிரில் அறம் விளைவது திண்ணம். பயிருடன் எப்படிக்களையும் தோன்றி விடுகிறதோ அப்படியே வாழ்வில் வன்சொல் சொல்ல வேண்டிய சூழ்நிலைகள் பல வந்து சேரும். அந்த நிலைகளிலும் வன்சொல் வழங்காத தெளிவு பெற்றுவிட்டால், மேற்கூறிய நான்கு பண்புகளும் அறமாக வாழ்வின் பயனாக உருவாகிவிடும்.

நீதிநெறிகளைப் பொதுவாக நோக்கினால் அவை வாழ்வில் சாதாரணமாகக் கடைப்பிடிக்க முடியாதவை போலத் தோன்றும். ஆயினும், அவை அப்படி அச்சுறுத்துதற்காக எடுத்தோதப்படுவன அல்ல; வாழ்வில் கொண்டொழுகத் தக்கனவே என்பதை முனைப்பாடியார் போன்ற பெருமக்கள் நமக்குக் காட்டுகின்றார்கள். அவர் வகுத்துத் தொகுத்து வகைப்படுத்திக் கூறும்போது அவைகளை எளிதில் நம் வாழ்வில் கடைப்பிடிக்கலாம் என்னும் எண்ணம் நம்முள் எழுகின்றது.

பதோ; புறக்கணிப்பதோ கிடையாது. இந்த ஒரு சான்றே 'உலகப்பண்பு வளர்ப்பதற்கும். மனித இனத்தை ஒருமுறை உறவில் இணைப்பதற்கும் இலக்கியம் எவ்வளவு உதவி செய்கிறது என்பதை அறியலாம்.

ஆகவே, தனி மனித வளர்ச்சிக்கும், ஒரு குடியொழுக்க மேன்மைக்கும், ஒரு மன்பதை மறுமலர்ச்சிக்கும், ஒரு நாட்டுப் பொது முன்னேற்றத்திற்கும்; உலக நன்மைக்கும், மக்களின் 'உணர்வு உறவுத் தொடர்புக்கும்' தனிக்கலைப் பண்பு, உள்ளப் பண்புகளை வளர்ப்பதற்கும் பயன் பட்டு அதன்வழி உலக ஒருமைப் பண்பையும், விரிந்த மனப்பான்மை நாகரிகத்தையும் ஓம்பி வளர்ப்பது இலக்கியத்தின் ஒப்பற்ற பயன் என்பதைத் தெளியலாம்.

※ யூசேப் சரித்திரம்

திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார், பி.ஏ., எல்.டி.

பதிகம்

தன்மகனைக் கொன்றானைத் தாவில்சீர் யூசேப்பு
நன்னயம் செய்து நயந்தனன்—என்வரினும்
'இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

நூல்

1. அரபுநாட் டில்யூசேப் பென்னும் அரசன்
மரபு வழாமல்தன் மக்கள்—புரந்துவந்தான்
அல்லா வருளினால் ஆண்மகவு பெற்றதனால்
எல்லாம் அடைந்தான் இனிது.

2. அம்மகனை ஆண்டிரு பஃதாம் அகவையில்
வெம்மகனிப் ராகிம் விதியது—வெம்மையால்
கோறல் புரிந்தான் கொலையறிந்த கோன்நிலை
கூறல் மிகையாம் குறித்து.

3. மகனை யிழந்துழலும் மன்னன் வினைஞர்
பகைவன் தொடர்ந்து பரிமேல்—மிகவிரைவின்
பாய்ந்து செலவும் பதகன் பதுங்கியோர்
ஈந்தினிடை நின்றான் இழைந்து.

4. சென்றவர் போனபின்பு ஈந்துழைச் சேர்ந்தொடுங்கி
நின்ற பதகன் நினைக்கின்றான்—என்றன்
உயிர்தப்பும் சூழ்ச்சி யுளதோவென் றுன்னி
அயிர்த்தவன் கண்டவன் அஃது.

5. மன்னவன் யூசேப்பு மாபெரும் வள்ளியோன்
சொன்னசொல் மீறாத தூயவன்—என்னவே
மன்னிடமே செல்வேன் எனதுரு மாற்றியென்
றன்னணமே நின்றான் அயர்ந்து.

6. மண்ணாளும் வேந்தனே மாபெரும் வள்ளலே
எண்ணாத வெண்ணி இவண்போந்தேன்—
கண்ணோட்டம்
இல்லாத என்பகைவர் என்னைத் தொடர்கின்றார்
கொல்லும் முயற்சிதாங் கொண்டு.

---

* (இச்சரித்திரம் J. R. Lowell (லவல்) என்னும் அமெரிக்கப் புலவர் செய்யுள் நடையில் எழுதியுள்ள கதையைத்தழுவி எழுதப் பட்டது.)

7. உண்ணுமல் பன்னுள் ஒளிந்தோடி வந்துற்றேன்
அண்ணல் அடைக்கலம் நின்னிடம்—கண்ணுரைப்
பார்த்துன்னைத் தீர்ந்தேன் பசியென்ருன் பாதகன்
வேர்த்த முகத்தால் வியந்து.

8. அஞ்சற்க என்மைந்தா அல்லாவின் வீடிது
தஞ்சம் அடைந்தோரைத் தாங்குதற்கு—பஞ்சமஞ்சம்
உண்டிங் குணவுண்ட பின்னர் உறங்கவெனக்
கண்டுரைத்தான் மன்னன் கசிந்து.

9. சொன்னபடி சோறளித் தாறுமொழி கூறிப்பின்
அன்னேன் உறங்க அமளிதந்தான்—மன்னவன்
உண்ட பதகன் உறங்கினன் பன்னுழி
கண்ணயர்ந்து மஞ்சத்தின் கண்.

10. காலை யிலவனைக் கெண்டெழுப்பிப் பொன்னளித்துக்
காலெனச் செல்லும் கடும்பரி—சோலையிற்
செல்லவென கைக்கொடுத்துச் செல்கவெனச் செப்பினன்
அல்லல் கெடுக்கும் அரசு.

11. இன்னமொழி கேட்ட இபுராகிம் உள்ளமுடைந்
தென்னசெய்வேன் எம்பெருமாற் கேற்றபதி—லென்னவெண்ணி
மன்னுவோ நின்மகனை மாபாவி கொன்ருனுக்
கென்னசெய்தாய்! என்ருன் அழுது.

12. சொன்ன வுனக்கிதோ சொன்னங்கொள் மூவளவு
என்ன வுரைத்தீந்து மன்னவன்—என்முன்னர்
நில்லாதே ஏகென்ருன் நீசெய்தீ தென்மனத்தில்
நில்லா திருக்க நிலைத்து.

13. அன்னவன் சென்றபின் ஆண்டகை நீத்தவுயிர்
தன்னவனை நோக்கியிது சாற்றுவான்—முன்னேய்!
இனித்துயில் கொள்வாய் இனிதேநின் இன்னுன்
றனிவொறுத்தேன் நாணும் படி.

சென்ற இதழ் தொடர்ச்சி:

நானாற்பது

வித்துவான் எஸ். நடராசன்,

தலைமைத் தமிழாசிரியர், டி. இ. எல். சி. உயர்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை.

களவழி என்பதைப் பற்றித் தொல்காப்பியம் 'ஏரோர் களவழியன்றிக் களவழி—தேரோர் தோற்றிய வென்றியும்' எனும் தொல்—புறத்திணையியல் 76-ஆம் சூத்திரத்தால் அறியலாம். இதனால் களவழி இருவகைத்து என்றும், அவை உழுவோர் களத்தின்கண் ஆற்றும் தொழில் நிலை ஒன்று, மற்றொன்று அரசர் முதலியோர் களத்தின்கண் ஆற்றும் வீரம் முதலியனவாம். இதனைக் கிணைப் பொருநரும், புலவரும் முறையே தேரேறி வந்து, பாடிப் பரிசில் பெறுவர் என்பர்: ஆகவே இக் களவழிநாற்பது போர்க்களத்தைப் பற்றி புலவர் பாடிய களவழி என்க. தொல்காப்பியத்தில் மேற்கூறிய சூத்திரத்திற்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியர்கள் யாவரும் இந்நூலினைக் குறித்துச் செல்கின்றார்கள்.

இந்நூலின் ஆசிரியர் 'பொய்கையார்' என்னும் பெயரினர் ஆவர். இப் பெயரினர் பலர் இருந்ததாக அறிகின்றோம். முதற்கண் கடைச் சங்க காலத்தில் இருந்த பொய்கையார் ஒருவராவர். இவரின் பாடல்கள் புறநானூறு (48,49) நற்றிணை (18) முதலியவைகளில் காணப்படுகின்றன. அவைகளில் சேரமான் கோக் கோதை மார்பனைப் பற்றிக் குறித்துள்ளதை, 'மூவன்—எயிற முந்திய கதவிற்றொண்டி'—(நற்றிணை 18) 'தொண்டி—அஃதெம் ஊரே யவனெம் இறைவன்'—(புறம் 48) இதனை நோக்க இவர் சங்க காலத்தைச் சேர்ந்தவர் அல்லர் எனத் தெரிகிறது. இனி, பொய்கையாழ்வாராக இருக்கலாம் என்பர் சிலர். ஆழ்வாரின் நடை முதலியவைகளோ இதில் சிறிதும் பொருந்துமாறில்லை. திருமாலைப் பற்றி யாதும் கூறாமல் கார்த்திகை விளக்கு முதலிய சிவனின் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதாலும், இவ்வாசிரியர் புனிதப் பொய்கையாழ்வாரின் வேறானவர் என்பதே ஏற்றது. அடுத்து, பன்னிரு பாட்டியல் எனும் இலக்கண நூலில் சில சூத்திரங்கள் பொய்கையார் பெயருடன் காணப்படுகின்றன. அவைகளின் நடைப்போக்கே இவரை ஒவ்வாது என்பது தெளிவாம். அதுவும் பன்னிரு பாட்டியலோ மிகப் பிற்பட்ட நூலாகும். யாப்பருங் கல விருத்தியுரையில் சில செய்யுட்கள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. ஒரு கால் அவை பொய்கையாழ்வாராக இருக்கக் காரணமுண்டு. ஆகவே சங்ககாலப் பொய்கையாரோ, பொய்கையாழ்வாரோ, பிற்கால இலக்கணப்

பொய்கையாரோ இவரல்லர்; இந்நூலைச் செய்த பொய்கை யார் அவரின் வேறானவர் என்பதே ஏற்புடைத்து.

இடம்:

சங்க காலக் கபிலர் தன்னைத் தொண்டி என்பதாலும், பொய்கையாழ்வாரோ தன்னைக் காஞ்சியில் பிறந்தவராகக் குறிப்பதாலும், இலக்கணப் பொய்கையார் இடமேயாதென அறிதற்கிடமில்லா திருத்தலாலும், பதினெண் கீழ்க் கணக்கைப் பாடிய புலவர் பலரும் பாண்டி நாட்டினராகக் காணப்படுவதாலும் இவரும் பாண்டி நாட்டினராதலே ஏற்றது. பரிசில் பெறுவான் வேண்டிச் சோழனின் பெருமை களைப் பாடினர் எனக்கொள்ளுதல் சிறப்பாம்.

சமய நிலை:

பொய்கையாழ்வாரே இவரெனக்கொண்டு சிலர் வைண வர் என்பர். கார்த்திகை விளக்கு முதலியவற்றை எடுத்துக் காட்டிச் சைவர் என்பர் சிலர். எம்மதமும் சம்மதமாய் நோக்கும் சான்றோராகக் கொண்டு, வைதீக மதமெனலே சால்புடைத்து.

காலம்:

களவழி நாற்பது கொண்டவன் தஞ்சை விசயாலயன் எனக் குலோத்துங்க சோழன் உலாவின் பழைய உரை கூறுவதால் ஒருவாறு இவர் காலம் கி.பி 850—900 என்பர். ஆனால், விக்கிரம சோழன் உலா, இராஜ ராஜ சோழன் உலா முதலியன இதனை வலியுறுத்தாதலினால் இக் கருத்து ஏற் புடைத்தாகத் தெரியவில்லை. ஆயின் கார் நாற்பதுக்குப்பின் அமைக்கப்பட்டிருக்கும் வைப்பு முறைகொண்டு நோக்கின் இஃது எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக்கொண்டு கி.பி. 775—800 என்று குறிக்கப்பட்டது.

இந்நூலைப் போலவே அகப்புறச் செய்திகளைக் கொண்டு சேர, சோழ, பாண்டியர்களைப் பாடிய முத்தொள்ளாயிரம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டென்பதால் அதற்கு முன்புறச் செய்யுளாக இது அமைந்துள்ளது எனலாம். இதனை அடிப் படையாகக் கொண்டே முத்தொள்ளாயிரம் தோன்றியிருத்தல் வேண்டுமென்பது எம் துணிபு. அறிஞர் ஆய்ந்துரைப்பின் நலம்.

புறநானூறு 74-ஆம் பாடலில் சேரமான் கணைக்கால் இரும்பொறையால் பாடப்பெற்ற பாடல் ஒன்று காணப்படு கிறது. அதில்தான் செங்கணால் சிறைபிடிக்கப்பட்டதும் உண்ணும் நீர் தாழ்த்திக்கிடைத்தமைக்கு ஆற்றாது, மானம் பெரிதென உயிர்விட்டான் என்று பழைய உரை கூறுகிறது. களவழியைப் பாடி அச்சேரனை விடுவித்ததாகப் பிற்கால நூல்கள் கூறுகின்றன. அஃது இதனை உறுதிப்படுத்துவ

தாகக் காணவில்லை. இருப்பினும் இந்நூல் சோழன் செங்கணன்மேல் பாடியதாகக் கூறுகின்றனர்.

இந்நூலில் செங்கண்மால், செங்கட்சினமால் எனவரும் பெயரொப்புமைகொண்டு உரைப்பர். 'வஞ்சிக்கோ அட்டகளத்து,' 'காவிரி நாடன் கழுமலம் கொண்டநாள்,' 'கொங்கரை அட்டகளத்து' எனவரும் அடிகளால் இச் சோழன் சேரர், கொங்கர் முதலியோருடன் போரிட்டான் என்பர். அரசர் பெயர் யாதும் குறிப்பிடாமல் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதை அறிய, சோழரின் பழைய போர் நிலையைப் புகழ்ந்து, புனைந்து கூறியது என்றலே ஆய்வுக்கு ஏற்றது.

செங்கணன் எனது கோச் செங்கணன் என்றே பெரிய புராணம் முதலியவை கூறுகின்றன. தேவாரம் அவரைச் செந்தமிழில் புகழ்ந்து விட்டது. பெரிய புராணமோ அடியார்களில் ஒருவனுக்கி விட்டது. திருமுறைகள் இவன் அமைத்த சிவன் கோவில் திறத்தைக் கூறுகின்றன. திரு மங்கையாழ்வார் இவரது கழுமலம், வெண்ணி, அழுந்தை முதலிய ஊர்களில் நடந்த போரின் வெற்றியைப் பாராட்டுகின்றார். இவைகளில் எல்லாம் கோச்செங்கணன் என்றே சிறப்பிக்கப்படுகின்றது. கோச்செங்கணனைச் செங்கணன் என்று மயங்கியதால் வந்த மாறுபாடு என விடுக்க.

இந்நூலில் செங்கணன் என்றோ, கோச்செங்கணன் என்றோ யாண்டும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் செங்கண்மால், செங்கட்சினமால் என வரும் பெயரொப்புமை கொண்டு கூறுவது எவ்வாறு பொருந்தும்? இதில் மால் என்பது சோழனின் பொதுப் பெயர். செங்கண், செங்கட்சினம் முதலியன அடையாக வந்துள்ளமை அறிக. இந்நூலின் கண்ணுள்ள 42 பாடல்களில் 3, 5 என்ற எண்களில் இப் பெயர்கள் அமைகின்றன. 'புனல் நாடன்' 'நீர் நாடன்' 'காவிரி நாடன்' 'செம்பியன்' 'சேய்' முதலிய பெயர்களோ முறையே 16, 7, 3, 5. 3 என்ற எண் அளவில் வந்துள. ஆதலால் செங்கண்மால், செங்கட்சினமால் சோழனைக் குறிக்க வந்த பொதுச் சொற்கள் எனக்கோடலே ஏற்றதாகும். மேலே கூறப்பட்ட பொதுச் சொற்கள் யாவும் முத்தொள்ளாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிந்தால் இச் சொற்கள் பொதுவாக உள்ளதை வலியுறுத்தலை நோக்க, இக் களவழி நாற்பது சோழரின் முன் பெருமைகளைப் புகழ்ந்து கூறப்பட்ட ஒரு நூல் எனலாம். அதனல் இது செங்கணனைப் பற்றியதும் அன்று; சேரமானை விடுவித்ததும் அன்று; பொய்கையார் என்ற சான்றோர் ஒருவரால் சோழர்களின் முன் பெருமைகளைப் புகழ்ந்து கூறியது எனல் சிறப்பாகும்.

சென்ற இதழின் தொடர்ச்சி :

கண்ணகியின் மணம் காதல் மணம்?

K. S. மகாதேவன், M.A., B.SC.,

கோவலனின் பண்பு நலன்

ஆனால் 'இளிவாய் வண்டினொடு, இன்னிள வேனிலொடு திரியும்' தென்றலுடன் போட்டி போட்டுக் கொண்டு 'குரல் வாய்ப்பாண ரொடு, நகரப் பரத்தரொடு திரிதரு மரபினைக் கோவலன் 'பண்பு நலனைக்'க கொண்டிருக்கின்றானே? (இந்திர விழவு : 200—204) அவன் பின்னால் செய்ய விருக்கும் செயல்கட் கெல்லாம் அவனை அறிமுகப் படுத்தும்போதே தோற்றுவாய் செய்யவேண்டு மன்றோ? எனவேதான்,

> "பண் தேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டிக
> கண்டு ஏத்தும் செவ்வேள் என்று இசை
> [போக்கிக் காதலால்
> கொண்டு ஏத்தும் கிழமையான்...(மங்கல : 37—39)

என்று நமக்கு அறிமுகப் படுத்துகின்றார். இங்கு நாம் அறிவதெல்லாம் எழிலும், இனியமொழியும் உடைய பெண் களின் கூட்டத்திலே கோவலன் புகழ்தான் பேச்சுக்குரிய பொருளாக இடம்பெற்றது. என்பதே யாகும்! இந்த அடிகளில் கோவலன் மணத்திற்கு முன்னர் கண்ணகியிடம் காதல் கொண்டிருந்தான் என்ற செய்தியே சொல்லப்பட வில்லை! ஆனாலும், இங்கு வருகின்ற 'ஆயம்' என்ற சொல் அகத்திணைப் பொருளில் கதைத் தலைவியாகிய கண்ணகியின் தோழியார் கூட்டத்தையே குறிக்கும் என்றும், தம் தலைவியின் காதலனைக் காதலால் புகழ்ந்து பாராட்டும் உரிமை அவர் கட்கே உரியது என்றும் அவ்வாறு கொள்ளா விட்டால், இந்தப் 'பண்தேய்த்த மொழியினர் ஆயம்' பொதுவாகப் பரத்தையர் கூட்டத்தையோ, அல்லது குலமகளிர் கூட்டத் தையோ குறித்துவிடும் என்றும், அப்படிக் கொண்டால், பரத்தையர் புகழ்வது புகழ் ஆகாது என்றும், குலமகளிர் ஓர் ஆடவனைக் கொண்டேத்துவதும் குல நெறியாகா தென்றும் கொண்டு, கண்ணகியின் தோழியர் பாராட்டுவதால் கண்ணகிக்கும் கோவலனுக்கும் மணத்திற் முன்னரே காதல் உறவு இருந்தது என்று சொல்வர்.

கோவலனும் ஆயமும்

இங்கும் நாம் காணவேண்டியது ஒன்று உண்டு. பூம்புகா ரிலே—போகம் நீள் புகழ் மன்னும் பூம்புகாரிலே—பரத்தை யரும் இருந்தனர்; குலமகளிரும் வாழ்ந்தனர். குலமகளிர்—

பரத்தையர் என்ற இருதுருவங்கட்கிடையில் தான் பூம்புகார் நாகரிகமே ஊசலாடிக் கொண்டிருந்தது. எனவே, கோவலனைப் பரத்தையர் கூட்டமும் பாராட்டியிருக்கலாம். கண்ணகியோடு சில ஆண்டும், கணிகையோடு பல ஆண்டும் வாழ்ந்த கோவலனை அவர்கள் விரும்பிப் பாராட்டினர் என்பதும் பொருத்தமாகவே தோன்றுகிறது! இது கோவலன் புகழுக்கு இழுக்கு ஆகுமே என்று நாம் வருந்துவதில் பயனில்லை. முன்னோர் தேடிய புகழுக்கு இழுக்கைத் தேடும் பாத்திரமாகத்தானே இளங்கோவடிகள் அவனைக் காண்கின்றார்! மேலும் 'ஆயம்' என்ற சொல்லைத் தலைவியின் தோழியர் கூட்டத்தையே குறிக்கும் தனிப்பொருளிலேயே இளங்கோ எடுத்தாண்டிருக்கின்றார் என்றும் சொல்லி விடுவதற்கில்லை இவனைப்பாராட்டும் ஆயம் எதுவாக இருக்கலாம் என்ற ஐயத்தை நமக்குத் தெளிவிப்பவர் போன்று, அடிகளே

"நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்தும்
குரல்வாய்ப் பாணரொடு நகரப்பரத் தரொடு
திரிமரு மரபின் கோவலன்........"

(இந்திரவிழவு 199—201)

என்று பின்னர் கூறுகின்றார். இங்கு 'நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்து' என்பதற்கு 'நகைத்து விளையாடும் திரளோடே காமக் குறிப்பாகிய மகிழ்ச்சி மொழியிலே இடைவிடாது பயின்று' என உரை எழுதும் அடியார்க்கு நல்லார் அதே பாணியில் 'பண்தேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டி......காதலால் கொண்டேத்துங் கிழமையான்" என்பதற்கும் "பண்ணைத் தொலைத்த மொழியினராகிய... மடவார் தம் காதலால்...அவனிசையைத் தமது ஆயத்தின்கண் பாராட்டிப் பரப்பிக் காமக் குறிப்பினால் உட்கொண்டு ஏத்துதற்குரியான்" என்று எழுதுவது குறிப்பிடுதற்குரியதாகும்.

குலமகளிர் பாராட்டுவது தவறு?

இனி, கோவலனைப் பாராட்டியவர்கள் குலமகளிரே எனக் கொண்டால் அதுவும் ஒருவகையில் காப்பிய மரபேயாகும்! அழகும் ஆற்றலுடைய மன்னனைக் காமக் குறிப்புத் தோன்றப் புகழ்ந்து பேசுவதாகக் கூறும் மரபு முத்தொள்ளாயிரத்திலோ, அல்லது ஒட்டக் கூத்தர் உலா விலோ தான் முளைத்தது என்று யாரும் சொல்லிவிட முடியாது. இளங்கோ வடிகளாரே இம்மரபினை அழகாகத் தொடங்கி வைத்திருக்கின்றார் என்பதற்கு

(i) "அம்மனை தங்கையில் கொண்டு ஆங்கு அணியிழையார்
தம்மனையில் பாடும் தகையெலாம் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேல் கூடவே அம்மானை"

(ii) "— — — பஞ்சவன்தன்
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்"

(iii) "— — — சேரன்
பனந்தோடு உளங்கவரும் பாடலே பாடல்"

போன்ற அடிகளைச் சான்றாகக் கொள்ளலாம். இவ்வாறு ஒரு தலைமகனைப் பூம்புகார்ப் பெண்களோ, மதுரைப் பெண்களோ, வஞ்சிப் பெண்களோ புகழ்ந்து பாடுவதைக் குலநெறியாகத் தான் கொள்ளவேண்டும். இல்லாவிடில் அம்மனை தங்கையில் கொண்டு தம்மனையில் பாடும் அந்த அணியிழையார்களையும் பரத்தையர் என்று சொல்லவேண்டிவரும். அல்லது அவர்கள் பாராட்டும் மன்னரது மனைவியரின் ஆயத்தார் என்று வரையறை செய்ய வேண்டி நேரும்!

கோவலன் நிறம்

கோவலனைப் பாராட்டும் பெண்கள் செவ்வேள் என்று பாராட்டுகின்றனர். அவன் செவ்வேளின் பண்பைப் பெற்றிருந்தானா அல்லது கருவேளின் கவர்ச்சியைக் கொண்டிருந்தானா என்பதைக் கதை நிகழ்ச்சிகளைக்கண்டு அறிந்து கொள்ளலாம்! ஆனாலும், சிவந்த நிறம் படைத்தவன் கோவலன். இதனை அடிகளார் 'கதிரொருங்கிருந்த' (மனையறம்—31) மையிருங் குன்றின் விஞ்சையின் (அடைக்கலக் : 51) பொன்னுறு நறுமேனி (ஊர்சூழ் : 40) எனப் பல இடங்களிலும் காட்டிச் செல்கின்றார். எனவே நிறத்தாலும் அழகாலும் கோவலன் வழிபாட்டிற்குரிய செவ்வேள் போல் காணப்பட்டான். எனவே பாராட்டியவர் பரத்தையரானாலும், குலமகளிரானாலும் சிவப்பாக இருப்பவனைப்பார்த்து 'கருவேள்' என்று பாராட்டுவார்கள் என யாரும் எதிர்பார்க்க முடியாதன்றோ? மேலும் பூம்புகாரிலே செவ்வேளுக்குக் கோவில்கள் இருந்தமை போன்று கருவேளுக்கும் இருந்தன. எனவே இருவரும் வழிபாட்டிற்குரியவரே! இதனால், செவ்வேள் என்ற சொல்லைக் கொண்டு பாராட்டியவர் குலமகளிராகத்தான் இருக்கவேண்டுமென்றோ, அதிலும் சிறப்பாகக் கண்ணகியின் தோழியர் கூட்டமாகத்தான் இருக்கவேண்டும் என்றோ முடிவு செய்துவிட முடியாது.

தீதிலாத்திறம்

கண்ணகியைப் புகழும் மாதர்கள் "தீதிலா வடமீனின் திறமிவள் திறம்" என்று பாராட்டுகின்றனர்; என்று அடிகளார் நமக்கு அறிவிக்கின்றார். இங்கு 'தீதிலாத்திறம்'

என்பது கணவனைப் பிரியாது வாழ்கின்ற சிறப்பேயாகும். அவ்வாறு வாழ்வதற்குரிய 'பெருங்குணம்' கண்ணகியிடம் இருக்கின்றது, என்றே மாதரார் தொழுது ஏத்துகின்றனர். கதை அவலத்திலே முடிந்தாலும், மாதரார் இவ்வாறு தொழுது ஏத்தியது போன்றே கண்ணகி கணவனுடன் பிரியாவாழ்க்கை எய்தினுள் என்பதனைப் பின்னர்,

"பீடுகெழு நங்கை பெரும் பெயரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னெடு
வானவூர்தி யேறினள்..." (கட்டுரைக்: 195—199)

என்று அடிகளாரும் கூறுகின்றூர். இங்குத் 'தீது' என்பதற்குப் 'பிறர் நெஞ்சு புகுதல்' என்று அடியார்க்கு நல்லார் பொருள் எழுதுகின்றூர். ஆம்! கணவனைப் பிரியா வாழ்க்கையைப் பெறுவதற்குக் கணவனல்லாத யாருடைய நெஞ்சிலும் இடம் பெறுமல் இருப்பதும் வேண்டப்படுவதே! இங்குப் பிறர் என்பது கோவலன் அல்லாத பிறர்தானே? அப்படி என்றூல் திருமணத்திற்கு முன்னரே, கோவலன் கண்ணகியின் உள்ளத்திலே இடம் பெற்றிருந்தால் தானே அவளது 'பிறர் நெஞ்சு புகாமை' பற்றிப் பேசுதல் பொருந்தும்? எனவே, கண்ணகியின் மணம் களவு வழிப்பட்ட காதல் மணமே என்று முடிவு செய்வர். ஆனல், 'பிறர்' என்பதற்கு இப்படித்தான் பொருள் கொள்ள வேண்டு மென்பதில்லை. ஒருத்தியின் உள்ளத்தில் யாரும் இடம் பெறுமல் இருக்கலாம்; ஆனல் அதே சமயத்தில் அவள் பலருடைய உள்ளங்களிலும் இடம் பெற்றிருக்கலாம். இறுதியில் அவர்களில் ஒருவரையோ, அல்லது அவர்களில்யாரும் அல்லாத வேறெருருவரையோ அவள் களவு வழியிலோ, அன்றிப் பெற்றேர் இயற்றும் மணத்தின் வழியோ கணவனைகப் பெறலாம். இங்கு மணத்திற்கு முன்னரே—அல்லது களவில்தான் ஒருவனை வரிப்பதற்கு முன்னரே, பிறர்—தன் கணவனை எதிர்காலத்தில் வர இருப்பவனல்லாத பிறர் நெஞ்சிலே அவள் புகுந்துவிட்டதைக் காண்கின்றேம். இந்த நிலைதான் இமயப் பண்பினர்தம் காப்பியங்களில் வருகின்ற 'சுயம் வர மங்கையர்க்குப்' பெரும்பாலும் ஏற்பட்டு விடுகின்றது. இதுவும் ஒரு குறையே யாகும். சுயம்வர மங்கையரின் பிற்கால இல்லற வாழ்க்கையில் இக்குறை பல சிக்கல்களை வளர்க்கத் துணைபுரிகின்றது. இதனை இராமாயணம், மகாபாரதம், அகலிகை கதை போன்றவற்றில் காணலாம். ஆனல் கண்ணகியின் நிலை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முற்றிலும் வேறுபட்ட நிலை. பெற்றேர்களால் கோவலன் மணமகனைக் கொண்டுவந்து நிறுத்தப் படுகின்றவரையில், அவள் பிறருடைய அதாவது வேறு

யாருடைய உள்ளத்திலும்கூட-கோவலன் உள்ளத்திலும்கூட—இடம் பெருதவள்! இந்தத் தனித்தன்மையை—ஏனைய காப்பியத்துச் சுயம்வர மங்கையர்க்கு அமையாத அந்தச் சிறப்பினையே—அடிகளார், 'தீதிலாத்திறம்' என்று தெரிவிக்கின்றார். இத்தகைய தீதிலாத்திறம் கண்ணகியின் பால் இருப்பதால் ஏனைய சுயம்வரமங்கையர் போன்று இவள் கணவனைப் பிரிந்து வாழும் கட்டம் என்றுமே வாராது என்பதே அவளைப் பாராட்டும் மாதரார் கொண்ட உறுதி. ஆனால், இந்தத் தீதிலாத்திறம்—பெருங்குணத்துக் காதல்—கோவலனிடம் இல்லாமல் போய்விட்டதே? பண்தேய்த்த மொழியினர் ஆயம் தன் உள்ளத்தில் இடம் அளித்துக் காதலால் கொண்டேத்துகின்றதே? எனவே, மணமக்கள் ஏனைய காப்பியங்களில் பிரிவது போல் பிரியாவிட்டாலும், இங்குப் பிரிவு வேறு வகையில் நிகழ்ந்து விடுகின்றது!

இவ்வாருகக், கண்ணகி மணம் காதல் மணம் என்பதற்கு அகச்சான்றுஒன்றும் இல்லாமல் போவதுடன், சொல்லாராய்ச்சியும் துணைபுரிவதாக இல்லை. இதனாலேயே, முப்பெருங் காப்பியம் ஆய்ந்த **திரு. ஔவை துரைசாமிப் பிள்ளையவர்களும்** "ஒருவரை ஒருவர் முன்னுறக் காண்டலும், காதல் கொள்ளலும், பின்பு கடிமணம் புணர்தலுமாகிய காதற்காமத் துறை இவன் (கோவலன்.) வாழ்வில் காணப்படவில்லை" என்று (சிலப்பதிகார ஆராய்ச்சி; பக்கம் 29) தெளிவு படுத்தியிருக்கின்றார்.

கம்பரும் இளங்கோவும்

இடைக்காலத்தில் வந்த கம்பர் தம் இராம கதையில் பொதியில் பண்பான காதல் மனத்தை வலியுறுத்தியிருக்கும் போது சங்க காலத்தை அடுத்து இருந்த இளங்கோவடிகள் காதல் திருமணத்தை மேற்கொள்ளாது விட்டு விட்டாரே என்று ஏங்குகின்றவர்களும் இருக்கின்றார்கள். இன்னும் சொல்லப் போனால், இத்தகைய ஏக்கமோ, கண்ணகி மனத்தைக் காதல் மணமாக்கக் காணப் பலரைத் தூண்டுகிறது என்று சொல்லவேண்டும்!

காதலைப் பொறுத்த வரையில் கம்பருக்கும் இளங்கோவடிகட்கும் கருத்து மாறுபாடில்லை! வாழ்க்கைக்குக் காதல் இன்றியமையாதது என்பதை இருவரும் உணர்ந்தே இருக்கின்றனர். ஆனால், இருவரும் அதை வற்புறுத்தும் முறைதான் வேறு! மலை எடுத்த மன்னனாலும் அசைக்க முடியாத கற்பு காதல் என்ற அடிப்படையில் தான் எழுந்திருக்கவேண்டும் என்று கம்பர் கருதினர். 'வில்லை முறிப்பவனுக்கு மாலை' என்ற நிலையில் வைக்கப்பட்டிருந்த சிதைக்குக் கம்பர் உயிர்ப்பு ஊட்டி இராமனுடன் சிறிது உறவாட விட்டார் அதன் விளைவு,

"அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்" "இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்" போன்ற இறவாத் தொடர்கள் தோன்றி இராம கதையை இன்சுவைக் காப்பியமாக்கி விட்டன!

இப்படிச் செய்ய இளங்கோவடிகட்குத் தெரியாதா என்ன? விரும்பியிருந்தால் கண்ணகி கோவலரைப் பொதியில் தென்றல் தவழும் காதற் சோலையில் ஆடவிட்டுப் பின்னர் கற்புமாளிகையிலே குடியேற்றியிருப்பார். ஆனால், அடிகளார் எழுதுவது இராம கதைபோன்ற இன்ப முடிவுக் கதை அன்று. மணமக்கள் பிரிந்து வாழ்வு இழந்து மடியும் துன்பியல் காப்பியம்! மணமாகிச் சில்லாண்டுகள் கழிவதற்குள் மனைவியை மறந்து மற்றொருத்தியை விரும்பி மணமகன் ஓட விருக்கும் கதைக்குக் காதல் மணம் கூறுவது காதலையே இழிவுபடுத்துவதாகுமன்றோ?

காதல் அடிப்படையில் எழுந்த வாழ்க்கை எத்தகைய புயலையும் எதிர்த்து நின்று வெற்றிபெறும் என்பதைக் கம்பர் காட்டுகின்றார். காதல் வேரூன்றாது செயற்கை முறையில் ஆக்கப்பட்ட வாழ்க்கை சிறுகாற்றுக்கும் ஆற்றாது சிதைந்து வீழ்ந்து விடும் என்பதனையே இளங்கோ எடுத்துக் காட்டுகின்றார்! கம்பர் உடன்பாட்டு முகத்தால் காதலைச் சிறப்பிக்கின்றார்; இளங்கோ அதனையே எதிர்மறை முகத்தால் வலியுறுத்துகின்றார். இதுவே இருவருக்கும் உள்ள வேறுபாடு!

பூம்புகாரின் இறுதி நாட்கள்!

இளங்கோ வரலாற்றுக் காப்பியம் எழுதுகின்றார் என்ற உண்மையினையும் நாம் மறந்துவிடல் ஆகாது. நாட்டில் காதல் இருந்தால் இளங்கோ அதனை ஏட்டில் காட்டியிருப்பார்! இமயப் பண்பாட்டின் மோதலால் குழம்பி நின்ற பூம்புகாரின் அந்த இறுதி நாட்களிலும் கூடக் குன்றத்து வாழும் குறவர்களிடமும், பாலையில் திரியும் வேட்டுவர்களிடமும், காடுகளில் நடமாடும் ஆயர்களிடமும் களவு வழிக் காதல் மணம் நிகழ்ந்து வந்தது என்ற உண்மையை இளங்கோ அடிகளார் எடுத்துக் காட்டியே செல்கின்றார். ஆனாலும் இமயப் பண்பு எழுப்பிய நால்வருணச் சுவர்கட்குள்ளே தங்களை அடைத்துக் கொண்டு விட்ட பெருங் குடி மக்களின் மாளிகையிலே காதல் என்பது பழைமைக்குரியதொரு பொருளாக மறைந்து விட்டது. ஓரிரு சமயங்களிலே பொதியில் தென்றலின் இயற்கையாற்றலாலே அது தழைக்கத் தொடங்கினாலும், நேர்வழி விடுத்து மறை வழியை மேற்கொண்டவர் கண்களுக்கு அது மன்னிக்க முடியாத தவறாகப்பட்டது! இதற்குச் சான்று தேடி எங்கும்

செல்லவேண்டுவதில்லை. புது நெறி மேற்கொண்ட பூம்புகாரிலேயே காணலாம். காதலித்த குற்றத்திற்காகக்காதலன் ஊரைவிட்டே ஓடுகின்றான்; காதலியோ, கன்னியாகவே இருந்து வாழ்நாள் முழுவதையும் கழிக்கின்றாள்! இவ்விருவரும் வருணச் சுவரைக் கடந்து குலம்விட்டுக் குலம் காதலித்தவர்களும் அல்லர்; சொந்த அத்தை மகனும், மாமன் மகளுமே! இருந்தாலும் களவினால் ஒன்றுபட்டனர் என்ற செய்தியை அழிவை நோக்கி உருண்டுகொண்டிருந்த புகார் நகரத்தால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை! குருதிக் கண்ணீர் வடிக்க வேண்டிய இந் நிகழ்ச்சியினைத்

தரும தத்தனும் தன் மாமன் மகள்
பெருமதர் மழைக்கண் விசாகையும் பேணி
— — —
மைத்துனன் முறைமையால் யாழோர் மணவினைக்கு
ஒத்தனர் என்றே ஊர் முழுவதும் அலர் எழ

(மணிமேகலை: சிறை செய்; 82-87)

என்ற அடிகளால் அறிந்து கொள்ளலாம். எனவே, வரலாற்றினைக் குழைத்துப் பூம்புகாரின் இறுதி நாட்களை ஓவியமாக்கும் இளங்கோவடிகள் நாட்டில் அக்காலத்து வந்து நுழைந்த மறை வழி மண முறையை அப்படியே கூறி அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதனைத் தமிழ் உலகம் நன்கு உணரும்படி செய்கின்றார்.

கானல் வரி

வீரத்தை வெளிக்காட்ட வாய்ப்பில்லாத அடிமை, வீரர்களின் அருஞ்செயலை மனத்துள் எண்ணி ஏங்குவதோடு நின்று விடுவான். கோவலனும் ஒரு சமூக அடிமையாகவே ஆகிவிட்டான்; வாழ்க்கையில் காதலுக்கு வாய்ப்பில்லாது போன நிலையில் கவிதையுலகத்துக் கற்பனைச் சோலையில் நுழைந்து காதல் துறைகளைச் சொல்லிச் சொல்லி இன்புற்றுக் கானல் வரி பாடுகின்றான். கானல் நீர் வாழ்க்கைப் பயிரை வளர்க்கப் பயன் படாது. அவ்வாறே கானல் வரிச் செய்திகளைக் கொண்டு அவன் கடந்த கால வாழ்க்கையில் ஏதேனும் காதற் பசுமை இருக்குமா என்று தேடுவதும் முயற்கொம்பேறி ஆகாயப் பூவைப் பறிப்பதாகவே முடியும்! ஏனெனில், வாழ்க்கையில் காதலைக் கருக்கி ஆனால் காப்பியத்தில் அதனைப் பெருக்கும் தற்கொலைச் செயலுக்குச் சமூகம் அன்றே வித்திட்டு விட்டது! பாரதியார் 20-ஆம் நூற்றாண்டிலே எண்ணி உளங் குமுறிய

திருவள்ளுவர்

வித்துவான் வை. தட்சிணாமூர்த்தி

நிலம், நீர், தீ, வளி, விசும்போடைந்தும் கலந்த மயக்க மாகிய ஞாலத்தின்கண் உற்றறியும் ஓரறிவு முதலாக ஆறறிவு ஏற்ற மக்களுயிர் ஈருகப் பல்வேறு திறத்தன வாய உயிர்கள் தோன்றின. ஓரறிவு முதலா ஐயறிவு ஈருய உயிர்கள் படிப் படியான உணர்வுபெற்று இயல் பெழு வேட்கையை அவ்வப் பொழுது தணித்து ஒழுங்கற்று ஒழுகாநின்றன. அவற்றுள் ஆறறிவு பெற்ற ஆற்றலால் நன்மையும், தீமையும் நனியறிந்து ஒரு ஒழுங்கொடு வாழ்ந்தன மனன் பெற்ற உயிர்கள். மனம் பொதுவாய் மக்களுக் கெல்லாம் வாய்த் திருப்பினும் இயல் பாகவே சிறப் பறிவு பெற்ற சில மக்கள் பல காலத்திற் கொரு முறை தோன்றி, மாக்களுடனேயே வதிதலான் மாக்கள் இயல் பெல்லாம் கொண்டு மாசுற்ற அறிவினராய் மயங்கிக் கிடக்கும் மக்கள் தொழுதியை ஆசற வைத்து மக்கட் பண்பை வளர்த்தனர். அங்ஙனம் இல்லறமும், துறவறமும், அரசியலும், இன்ப வாழ்வும் பிறவும் இயல்பழிந்து நின்ற நிலையில்தான் ஒப்பறு புலமை செப்பரு புகழ்சால் வள்ளுவப் பெருந்தகை தோன்றினர்.

பல்வேறு வகைத்தாயே வளிசூழ்ந்த இடத்தும் தனக் கின்றி யமையா உயிர்க்காற்றை, (Oxygen) நீர் நீக்கி பாலுண்

"காதலர்ப் பிரிந்த மாதர் நோதக
ஊதுலைக் குருகின் உயிர்த்தனர்......"

(அந்திமாலை: 58-59)

என்பதனல் அறிகின்ருேம். அவ்வாறே தமிழ் வேந்தரின் வெற்றிப் புகழையே ஐயுற்று இலேசாக எண்ணிப் பேசத் துணிந்துவிட்ட இமய மன்னரின்,

"தென்தமிழ் நாடாளும் வேந்தர்
செருவேட்டுப் புகன் றெழுந்து
மின்தவழும் இமய நெற்றியில்
விளங்கு வில்புலிகயல் பொறித்தநாள்
எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்"

என்ற வார்த்தையையும் நாம் கேட்கவே நேரிடுகிறது!

வீடும், நாடும் கண்ட இந்தப் பெரும் வீழ்ச்சியைச் செந் தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து' என வந்து தோன்றிய கதைத் தலைவி எப்படிப் போக்குகிருள்? இதுவே காப்பியம் கூறவிருக்கும் கதைப் பொருளாகும்.

கண்ணகியின் மணம் காதல் மணம்?

"நாடகத்தில் காப்பியத்தில் காதலென்ருல்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்ரும் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்ருேரத்தே
ஊரினிலேகாத லென்ருல் உறுமுகின்ருர்
பாடைகட்டி அதைக் கொல்ல வழிசெய்கின்ருர்
பாரினிலே காதலென்னும் பயிரைமாய்க்க
மூடரெல்லாம் பொருமையினுல் விதிகள்செய்து
முறைதவறி இடர்எய்திக் கெடுகின்ருரே!"

என்ற நிலையினை இளங்கோவடிகள் காலத்திலேயே பூம்புகார் எய்தி விட்டது!

கொடியன்னுர் அச்சம்

பொதுவாக, ஆடவர்கள் வேற்றுப் பண்புகளை விரைந்து ஏற்றுக்கொண்டு விடுவர். ஆனல் பெண்டிர்கள் வழிவழி வரும் தாயகத்துப் பண்புகளை எளிதில் கைகழுவி விட்டதாக வரலாறு இல்லை! இன்றும், ஆடவர்கள் குடுமியைக் கத்தரித்து விட்டுக் கொண்டு 'கோட்டும் சூட்டும்' அணிந்து திரிந்தாலும், பெண்டிர் மட்டும் என்றும் போல்

"போதொடு விரிகூந்தல் பொலனறுங்
கொடியன்னராகவே" (மங்கல: 60)

இருந்து வருவதைப் பார்க்கின்ரேம். எனவே' பொதியில் நிலத்திலே இமயப்பண்பு இடம் பெறுவது கண்ட தமிழ்த் தாயார் உள்ளங்களிலே வேற்றுப் பண்பின் மோதலாலே வீட்டின் பெருமை குறைந்து விடுவதோடு நாட்டின் வெற்றிப் புகழும் இறங்கி விடுமோ என்ற அச்சமும் கவலையும் குடி கொண்டிருக்க வேண்டும்!. வீட்டில் இல்லறம் சிதையக் கூடாதே என்ற அவர்கள் கவலை

"காதலன் பிரியாமல் கவவுக்கை
நெகிழாமல் தீதறுக......"

என அவர்கள் வாழ்த்துவதாலும், நாட்டின் வெற்றிப் புகழ் நலிந்துவிடக் கூடாதே என்ற அவர்கள் கவலை,

"இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையதா"

என்று வேண்டியதாலும் வெளிப்படுகின்றது. ஆனல், பூம் புகார் நகரத்துப் 'பொலனறுங் கொடியன்னர்' கொண்ட இந்த அச்சத்தைப் பெண்டிர் உள்ளத்து எழுந்த பேதமை என்று நாம் தள்ளிவிட முடியாது என்பதே இங்குக் காணும் இரக்கத்திற்குரிய உண்மை! ஏனெனில் மிக விரைவில் பூம் புகார் இல்லங்களில் எழும் பெருமூச்சொலி அலைகடல் ஒலி யையும் மிஞ்சி மேலெழுகின்றது என்பதைக்,

குருகுபோல்; எடுத்துக் கொண்டு இயல் பொளி வீசும் விளக்கைப் போல, வினையின் நீங்கிய விளங்கிய அறிவின் முதலோனைத் தோன்றிய வாலறிவு வள்ளுவனார்க்கு காணும் பொருளில் எல்லாம் உண்மைப் பொருள் புலனாகி அப் பொருள் வாலறிவுக்குத் துணையாக ஒளிவீசிய அறிவுச் சுடர் தான் திருக்குறள். காதி விளையாடி இரு கைவீசி வந்தாலும் தாதிமனம் நீர்க்குடத்தே நிலைத்தல் போல, எப் பொருள் எத்தன்மைத்தாய் இருப்பினும் அப்பொருளில் மெய்ப் பொருள் காணும் மெய் உணர்வினராய் பார்த்தால் உலகத்தவர்போல் இருந்தவர் திருவள்ளுவனார் என்பது அவரது செம்மொழியானும், புலவர் பெருமக்களின் புந்தியொடு ஒன்றி அவர்கள் வாய் வழியே 'பொய்யில் புலவன்' 'அறம் பாடிற்றே' என்றெல்லாம் புகழ்தலானும் அறிஞர்கள் ஆய்வானும் தெளிந்துணரலாம்.

விளங்கிய அறிவானும், எப்பொருளினும் உண்மை காணும் சீரிய திறத்தானும், தக்கது இன்ன தகாதன இன்னவென்று உணரா மாக்களியல் மக்களுக்கு மதியூட்டக் கருதினமையானும் திருக்குறளை அருளிச் செய்தனரே அன்றி எல்லாவற்றிலும் 'படாத பாடு பட்டு'ழன்று தேறி அவ்வாற்றான் எழுந்த பட்டறிவு முடிவால்தான் குறள் தொகுத்தார் என்னில், மெய்ப் பொருள் காணும் நுண்ணறிவுத் திறமிலாராய், உற்றலால் தேருக் கயவரனையராய், அல்லற் பட்டா லன்றி அறிவு தோன்றாதவராய், எதிரதாக்கும் மதியிலராய் ஆதலால் அக்கருத்து வள்ளுவனார்க்கு மறைவாக இழிவையே தந்து நிற்கும். ஒரு சிலவன்றி எல்லாவற்றையும் துய்த்தே கூற வேண்டுமானால் காலம் போதாமையானும், உலகத் தொழுக்கான் நுண்ணறிவால் இஃதாற்றின் இஃ துறும் என்று அறியலா மாகலானும், 'பல துறைகளிலும் இளமை முதலே ஈடுபட்டு நல்லறிவு பெற்றவர்' வள்ளுவர் என்பது தங்கள் நேர் வைத்து தகவல்ல கூறுதலேயாம்.

துறவி சிவப்பிரகாசனார் படிற்றொழுக்கத்தில் இன்பம் நுகர்ந்த பின்னரே பிரபுலிங்க லீலை யாத்தனர் இல்லையேல் இவ்வளவு சுவைபட யாத்தல் இயலாது பட்டறிந்தாலன்றி இத்திறன் கைவரா தென்றார் ஒருவர், திருத்தக்க தேவர்க்கு குறை ஏற்றினாற்போல.

மற்றவர் அதற்கு அற்றன்று உலகியல் கொண்டு உண்மை அறியும் ஒள்ளிய அறிவாற்றலான், தன் அறிவும், செயலும், வடிவும் கொண்டு தாய் தந்தையை உய்த்துணரும் தன்மை போல உணர்ந் தெழுதியவை என்றார்.

அதற்கும் அவர் ஒருப்பட்டார் இல்லை. மற்றவர் உடனே ஒரு செப்புக் காசினை கழிவினுட்செருகி நாளை விளக்குவோம்

வருக என்று பிரிந்து மறுநாட் கூடினர். மறுத்த அவரையே காசினை எடுக்கச் செய்கையில் காசு வெளுத்திருந்தது. உடனே அவர் கழிவினுட் புளிப்புண்மையில் வெளுத்தது என்றனர்.

மற்றவர் 'புளிப் புண்டென்பதை சுவைத் தறிந்தனிரோ?' என்றாராம். அப்பொழுதுதான் உய்த்துணர்வானும் உண்மை புலனாகும் என்று அறிந்தார். என்பது ஒரு சிறுகதை. இக்கதை கூட படாத பாடுபட்டு குறள் எழுதினர் என்று கூறுதலை எள்ளும்.

யானை ஓட்டுதல், பாவை வனைதல் எல்லாம் பட்டறிவு தான் என்றால், வரைவின் மகளிரும், கள்ளும், சூதும், கயமையும் பிறவும் படாத பாடு பட்டறிந்தவைதாமா? அறிந் தவை எனின் திருக்குறள் என்னும் முதல் நூல் யாக்கு மள விற்கு அஃகி அகன்ற அறிவு எங்குபோயிற்று? உற்றே அறிந்தால் ஏனைய வாயுணர்வின் மாக்கட்கும், மலர்தலும் கூம் பலும் இல்லா எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காணும் அறிவுடைய வள்ளு வனர்க்கும் வேற்றுமை என்னை? சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின் பால் உய்க்க இயலா புலனடக்கம் இல் லாதவரா அவர்? அவ்வாறெல்லாம் அமைதற்கு ஏது அகச் சான்று புறச்சான்று வழி இன்மையான் 'நுணுக்கப் பயிற்சி யால்' யாத்தார் என்பதெல்லாம் பெரியார்க்கு இழிவு கூட் டலே ஆம்.

மதிநுட்பம் நூலோடுடையவர் திருவள்ளுவர் என்பது "யாமெய்யாக்கண்டவற்றுள், எப்பானூலோர்க்குற துணிவு, ஆய்ந் தவர்கோள், சான்றோர் பழிக்கும், என்றுரைக்கும் நூல்" என்பன வற்றான் அறியலாம். முன்பிருந்த நூல்களை நுண்ணி தின் உணர்ந்து அவற்றுள் கூறப்படாதன வற்றையும் அறங் களையும் தொகுத்துக் கூறினர். இவர் நூலுக்குப் பின்பே ஏனை அற நூல்கள் தோன்றி இருக்கும் நிலையும் இக்கூற்றைத் தெள்ளிதின் விளக்கா நிற்கும். பதிற்றுப்பத் தொத்த நூற்கள் காலத்திருந்த கடுந்தமிழ் நடை நாளடைவில் எளிமையுற்று வள்ளுவர் காலத்து இனிய விழுமிய மொழிகளாய் வெளிப் பட்டன. எளிய தென்று கூறிவிட்டாலும் பதிற்றுப்பத்து நோக்க எளிதே ஆம். இவ் வெளிய மொழியமைப்பு காலத் தான், வழக்கான், சூழ் நிலையான் வந்ததே அன்றி வள்ளு வரான் வலியக் கொணர்ந்த தன்றென்பது வரல் முறை அறிந் தார் அறிந்ததொன்றேயாம். அந்நாள் நடை நாளடைவில் எளிமை ஆகி இற்றை கனகசுப்புரத்தினம் கவிதை வரை வரு நிலையும், அவ்வெளிமை கனகசுப்புரத்தினம் போன்றாரால் வலிய வரவழைக் கொண்டது என்று கூற இயலாமல், சிலம்பு,

சிந்தாமணி, கம்பன், சித்தர்கள், இராமலிங்கர், பாரதி வழியாய் வரவர எளிமை பெற்ற தென்பதும் நடை முறையில் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறே திருக்குறள் இழுமென் மொழியால் விழுமிது நுவலும் தன்மை பெற்றதே தவிர 'வேண்டு மென்றமைத்த மொழியமைப்பு' என்றல் பொருந்தாது.

தனித்தன்மை என்பது இயல்பாய் பிறந்த பொழுதே—கருவிற்றிருஉடையராகவே-அமைவது. அத்தன்மை இயல்பிற் பிறந்த அறிவுசால் வள்ளுவனர் 'கடும் உழைப்பால் தனித் தன்மை பெற்ருர்' என்ருல் முன்பு தனித் தன்மை பெருதவர் என்ற குறையுறும். ஆகவே 'கடும் உழைப்பாற் கைகூடிற்று தனித்தன்மை' என்பது சிறப்பின்ரும்.

தான் உய்த்துணர்ந்த உள்ளக் கருத்தினை உள்ளவாறே சொலல் வல்லவர் திருவள்ளுவர். உணர்ச்சி எல்லாம் எல்லா மாந்தருக்கும் பொது வாகலான் நுண்ணுணர்ச்சியோடு மாந்தரியல்பும் சேர்த்து இயல் பிற்றரும் அவர்மொழி எல்லோ ராலும் வியந்து போற்றப் படுகிறது. திரைப்படத்தில் ஒரு குழந்தை பேசும் அறிவுடைமையை தன் குழந்தையொடு சார்த்தி மகிழ்கின்றனர் பார்ப்பவர். அகப்பொருள் நிகழ்ச்சி களும் காணும் பொழுது தன் உணர்ச்சி செயலொடு சார்த்தி அக்காட்சியை பாராட்டுகிருர். இச்சுவைகளைப் பெற, பட மெடுத்தவர் தம் உணர்வையே அடிப்படையாகக் கொண்டமை யாவரும் அறிவர். அவ்வாறே வள்ளுவர் யாத்தனரே அன்றி படிப்போரின் உணர்வுநிலைக்காக மிக முயற்சி செய்து "முயற்சி நிலை" பாக்களாக யாத்தார் என்ருல் அவரது புலமைக்கும் 'வினையின் நீங்கிய வாலறிவுக்கும் மாசேயாம் என்றுணர்க. ஆகவே மொழியமைப்புச்சிறப்பிற்காகவள்ளுவர் தனிக்கருத்தும் முயற்சியும் எடுத்துக் கொண்டிருக்கிருர்" என்றுகூறல் ஆய்வின்மையாம்.

திருவள்ளுவர் இலக்கணம் வழுவாதவர் எனினும் சில புது இயலைப் படைக்கவும் வல்லவர்.

'அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்'
'அற்ருல் அளவறிந்துண்க அஃதுடம்பு பெற்ருன்'
'அணியன்ருே நாணுடைமை சான்ருேர்க் கஃதின்றேல்
'இன்பங் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்'

என்பவற்றுள் வரும் ஆயுத எழுத்தின் அளவை ஓசைநோக்கி ஒருமாத்திரை யாக்கி இருக்கிருர்.

'மெய்யின் அளவே அரைஎன மொழிய
அவ்வியல் நிலையும் ஏனைய மூன்றே'

என்பதனெடு பொருந்த ஏனைய இடமெல்லாம் உரைத்த மையும் நோக்கற்பாலது அன்றி நேர்பு, நிரைபு எனக் கொள்ளலாமோ எனின்

"முற்றியலுகரம் மொழிசிதைத்துக் கொளா"

என்பதனெடு மாறுபடு தலன்றி, அப்பொழுதும் தளைவந்து மயங்கும் என்க. ஆகவே ஆயுதம் ஓசை நோக்கி குற்றெழுத் தியல்பு பெறும் என்பது அவர் கொள்கை. அக்கொள்கை இலராய் இருந்தால் அஃதென்னும் சுட்டை

"பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத்
தெப்பானூலோர்க்கும் துணிபு,
காமக் கடல்மன்னு முண்டே அதுநீந்தும்"

என்றூற் போல அது என்றே சுட்டி இருப்பர்.

"நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்" என்றுவிதி இருப்பினும் தம்குறட்கண் கதவு, சேர்வு, போன்றசொற்களை விரவ அமைத்திருப்பதும் நோக்கற் பாலது. ஆகவே "இலக் கணமுறை" பிழையாவிட்டாலும் சில இடங்களில் புது இயலும் படைக்கவல்லவர் என்பதும் உணர்தல் வேண்டும்.

உள்ளுணர்வை எஞ்சாது முழுதும் எடுத்துரைக்க வலிபெற்றவரே வாலறிவினர். இணரூழ்த்து நாறு மலரனை யராய் இல்லாது கற்றது உணர உரைக்கும் ஆற்றலே அவரது நுண்ணறிவினைப் புலனுக்கும். திருவள்ளுவரை "ஓரளவே படைத்தளித்துள்ளார்" என்றால் எல்லாம் படைக்கும் ஆற்றல் இலர் என்று திருவள்ளுவரையும், இல்லாத தில்லை, சொல்லாததில்லை, எஞ்சாத முழுமுதல்நூல் என்றெல் லாம் கூறும் புலவர், அறிஞர்களையும் இழிவு படுத்துதலோடு எல்லாம் அமைந்து கிடப்பது அறியாத நிலையையும் அதுவே எடுத்தியம்ப வல்லதாம்.

ஆகவே படாதபாடு பட்டு, முயற்சிநிலைப்பாவால் முயற்சிக் கொரு விளைவாக, ஓரளவே திருவள்ளுவர் கூறினர் என்றெல்லாம் கூறுதல் பிழைப்பட்டதே ஆகும். வினையின் நீங்கிய விளங்கிய அறிவின் முனைவரான வள்ளுவர், மெய்யுணர் வானும், அகன்ற நூற்பயிற்சியானும், தக்கன இன்ன, தகாதன இன்ன என்பதனை விதி முகத்தானும், எதிர்மறை முகத் தானும் மக்கள் மனமாசு துடைக்க எஞ்சாது முழுவதும் விளங்க இயல்பாகவே திருக்குறளை ஆக்கினர் என்பதனை உணர்க.

ஞாயிறு

ச. பாலசுந்தரம்

நாட்டினிற் பசுமை செய்வாய் நாவலர் கருத்தில் ஓங்கிப்
பாட்டினிற் புதுமை செய்வாய் பைங்கதிர் விரித்துவான
மேட்டினில் அழகு செய்வாய் வியத்தகு ஞாயிறே என்
ஏட்டினில் இனிமை செய்ய எழுக! நீ எழுக வாழி! 1

திரண்டபே ரழகே கீழைத் திரைக்கடல் அலையின் மேலே
புரண்டெழு தோற்றங் கண்டேன் பூரித்துப் பொலிந்த துள்ளம்,
உருண்டனை வானவீதி ஒளிப்புனல் உலகிற் பாய,
வெருண்டிருள் ஓடக்கண்டேன் வியந்தெனை மறந்து நின்றேன் 2

நிறைகுணக் கடல்நீ ராடி நெடுந்திரை மரைகள் வீசச்
சிறகெனும் கைகள் கொட்டிச் சேவல்சங் கொலித்துக்கூவ
பறவையின் னிசைகள் பாடப் பாவையர் கோலம் போட
இறைவர வெதிர்ந்து காக்கை இரைந்துகட்டியங்கள் கூற 3

தடந்தொறும் தாமரைப்பெண் தண்முகம் மலர்ந்து நிற்க
இடந்தொறும் கொடிமா தர்தம் எழிற்கரம் மலர்கள் ஏந்த
தொடர்ந்துவான் பனிநீர்த் தூவச் சுடர்முகம் விரித்து வானில்
நடந்துயர் ஞாலம் போற்ற வருபெரும் அரசே வாழி! 4

வண்ணவான் முழுது மோங்கி வளர்பெரும் உருவே நீதான்
மண்ணவாம் விளக்கோ வானை வலம்வரும் சுடரோ, யாரும்
பண்ணலா எழிலோ தீயின் பந்தமோ பட்டை தீட்டி
விண்ணிலே பதித்த செங்கேழ் மாணிக்க மணியோ குன்றோ? 5

அருளெனும் பெருக்கோ வெம்மை அணுத்திரள் கடலோ ஞாலப்
பொருளிவை என்றுகாட்டப் போந்ததோர் பொன்விளக்கோ
மருளறு வானின் மன்னன் வனைந்தணி முடியோ அன்றி
இருளெனும் பகையை மாய்க்க எழுப்பிய சிரிப்போ, வானின் 6

உடுக்களை உருக்கி வைத்த ஒளிக்குகை தானோ, வானோர்
அடுக்களை தானோ, அன்றி அனற்பெரு மலையோ தங்கம்
அடுக்கிவைத் தூதுங் கொல்லன் அருவினைக் கூடந் தானோ
முடுக்கிய தங்கத் தேரோ முறுகொளிப் பேழை வாயோ 7

வாய்மையின் வடிவோ, நீல வான்கடல் அலையின் மேலே
பாய்மரம் இன்றிச் செல்லும் பசிய பொன் நாவாய் போலச்
சேய்மையில் தோன்று கின்றாய் செஞ்சுடர்த் தேவே மண்ணில்
தூய்மையை விரிக்க வந்த தொன்முது பிழம்பே, வாழ்வில் 8

நித்தியப் பொருளே இந்த நிலமகள் கொழுநனே, கூர்
பத்தினிப் பெண்ணே உன்னைப் பார்ப்பவர் கண்கள் கூசப்

பத்தரை மாற்றுப் பொன்னைப்பாரெல்லாம் விளக்கிநின்றாய்
பித்தளை உருக்குப் போலப் பெரியதோர் வெம்மை ஏனோ? 9

மூவுல கழகுநங்கை முனிவுகொள் முகனோ தேவர்
தீவலம் புரிய விண்ணிற் செய்ததோர் வேள்விக்குண்டோ
நாவலர் போற்றும் தெய்வ நல்லற ஆழிதானோ
காவிய முதிர்வோ வானக் கதிரெனும் அரசே சொல்வாய்! 10

வடிவிலே சிறியை ஆனால் வானெலாம் பரந்து நின்றாய்
முடிவிலா விளக்க முன்றன் மொய்ம்பையா ருரைக்க வல்லார்
நெடியவாம் கைகள் நீட்டி நிலமெலாம் தடவு கின்றாய்
நொடியிலே வெம்மைஏறி நோக்குதற் கரியை ஆவாய் 11

மலைதவழ் அருவிதோறும் மகிழ்ந்துநீ ஆடல்செய்வாய்
அலைகடல் நடனஞ் செய்வாய் அழகுற அந்தி வானில்
விலையிலாத் தங்கத் தாலே மெருகிட்டுத் துடைப்பாய் இந்தக்
கலையெலாம் எங்குக் கற்றாய்க் கலப்பிலா ஒளிகூர் செல்வா 12

வெள்ளையும் கருப்பும் சாம்பல் வண்ணமும் வேறு வேறாய்க்
கொள்ளுறு முகிலைப் போர்த்துக் கொண்டுநீ ஒளிவாய் மீள்வாய்
கள்ளுடன் அமிழ்தம் சேர்த்துக் களிப்புடன் ஊட்டுவாய்உன்
தெள்ளிய செயலை யாரும் தெரிந்தவர் உண்டோ கூறாய் 13

துள்ளலைக் கடலின் நீரைத் தூக்கிவந் தமுதாய்ப் பொய்யும்
வள்ளலே! வாடைக் கால வன்பனிப் பகையை மாய்க்கும்
மள்ளனே! மதிக்கும் மற்ற மறுவிலாக் கோள்க ளுக்கும்
உள்ளொளி அள்ளி வீசும் உயர்புர வலனே! வாழி! 14

தொடுந் தொறும் பொருளைப் பொன்போற் சுடர்பெறச் செய்வாய்
[வானில்
நெடுந்தொலை விருந்தும் கையை நீட்டிச் சூடேற்று வாய்நீ
சுடுந்தொறும் தூய்மை செய்வாய் தொடர்ந்து நோயுற்றா ருன்பால்
படுந்தொறும் நீங்குவார்நோய் பாரிலே உனையார் ஒப்பார்? 15

நீரியல் உயிர்கள் இட்ட நிறைசினைக் கடையாய் நின்று
சீருடன் உயிர்க்கச் செய்வாய் தெண்கடல் நீரைக்கையால்
கூரிய சுவைசேர் வெண்கல் கொழுவிய அமுதம் செய்வாய்
ஈரிய பனியின் கட்டி இளக்கி ஆறாகச் செய்வாய்! 16

உறைபனி உன்னைக் கண்டு உருகிடச் சிரிப்பாய் கைப்பே
நிறைகடல் நீறைஅள்ளி நிறந்தவழ் முகிலாச் செய்ய
பறைபட வானம் பெய்து பாரினில் யாறாய் நீளும்
சிறைபடும் ஏரி மற்றுச் சிறுகுளம் வாவி யென்றே. 17

தன்னையே ஒப்பாய்த் தாயாய் தந்தையாய் உலகைக் காப்பாய்
உன்னையே வரவேற் பார்க்கிங் குடலுயிர் உறுதி செய்வாய்

பொன்னையே அள்ளியிந்தப் பூவினில் தெளிப்பாய் ஆ! ஆ!
முன்னையே பிறந்தாய் ஆனால் முடிவில்லை மூப்பும் இல்லை 18

மரஞ்செடி கொடிகள் யாவும் மகிழ்ந்துநின் முகத்தைக் கண்டு
விரும்பிமெய் தளிர்க்கும் பூக்கும்; விசும்பிடை அரசே உன்றன்
கரம்பட மலைகள் பொன்னின் கஞ்சுகம் பூணும் மாலை
திரும்பிநீ சென்றால் மேலைத் திசைமுகம் செவப்பாள் நாணி 19

மண்ணும் வான்மதியும் கோளும் வலம்வரும் உன்னைப் பொங்கும்
தண்கடல் அமைதி கொள்ளும் தளிர்விட்டு மரங்கள் பூக்கும்
கண்ணொளி துலங்கும் தீய கள்ளமும் அஞ்சும், நீதான்
விண்ணிடை யிருந்தால் வாழ்வின் வேலைகள் நடக்கும் மண்ணில் 20

நிறைந்தஉன் ஆட்சி தன்னில் நிலவொடு விளக்கும் மீனும்
குறைந்தொளி தேய்ந்து மாழ்கும் கொடுவன விலங்கின் கண்கள்
மறைந்துடல் மடிந்து தூங்கும் மாமலை நீதான் சேர்ந்தால்
உறங்கிடும் உயிர்கள் மக்கள் உளத்துணர் வமைதி கொள்ளும் 21

காலமெய்க் கணக்கும் கோள்கள் கணிதமும் தோன்றுதற்கு
மூலமாய் நிற்பாய் நோன்பு முற்றிய தவத்தோர் போற்றும்
கோலமாய் அறியா மைக்கோர் கூற்றமாய் உயிர்கள் யாவும்
சீலமாய் வாழ்வதற்கோர் தெய்வமாய் விளங்கும் தேவே 22

வருஞ்சிறு பொழுதும் நாளும் வாரமும் திங்களோடு
பெரும்பொழு தாறும் யாண்டும் பேசுமுக் காலம் யாவும்
நிரம்பிநீ அருளுகின்றாய் நீரொடு காற்றும் மண்ணும்
அரும்பிய துன்னால் என்றால் அளப்பருங் கடவுள் நீயே 23

ஓரெழு வண்ணம் கொண்ட ஒளியுரு வென்றும் உன்னால்
பாரெழுந் துயர்ந்த தென்றும் பரிப்பது நீயே என்றும்
காரெழுந் தளிக்கும் நீர்உன் கரம்படு தன்மை என்றும்
ஊரெழுந் தறிஞர் சொல்வார் உண்மையிவ் வளவேதானோ? 24

ஓவியம் வரைவார் உள்ளத் தொளிர்தரும் உணர்வே சீர்த்த
பாவியற் புலவோர் நெஞ்சிற் பசியகற் பனைகள் தோற்றும்
காவியப் பொருளே எங்கள் கன்னிநற் றமிழ்த்தாய் போல
மேவுசீர் விளங்க நிற்கும் விரிசுடர்த் தேவ வாழி! 25

சென்ற இதழின் தொடர்ச்சி:

அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனுர்,
தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(உரிமை ஆசிரியருக்கு)

தமிழகத்தில் சமணம்:

தமிழகத்தில் தவத்துறையிலும் கலைத்துறையிலும் வளர்ந்து நின்ற சமண சமய வரலாற்றின் பிற்காலப் பகுதியே இங்கு இடம் பெறுவதாகும்.

தமிழக மூவேந்தர் வரிசையை அடுத்து வரலாற்றுள் கூறத் தக்க வாய்ப்புடைய மன்னர் பல்லவ வேந்தர்களே யாவர். இவர்கள் காலத்திலிருந்து கற்றளிகளும், வரலாற்றுச் சிறப் புடைய கல்வெட்டுகளும் தமிழகத்தில் தோன்றியதே இச் சிறப்புக்கோர் எடுத்துக் காட்டாம். இத்தகைய பல்லவர் மரபில் கி. பி. 615 முதல் 630 வரையில் மிக்க புகழோடு ஆட்சி செலுத்திய மன்னன் மகேந்திரவர்ம பல்லவனுவன். இவன் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் சமயவாதங்கள் அரும்பி வந்தன. நாளடைவில் அவற்ருல் ஒன்றுக்கொன்று பகைமை முற்றத் தொடங்கியது. அரசனின் செல்வாக்குப் பெற்ற சமையமே அவ்வப் பகுதியில் தலை தூக்கி நின்றது. அக் காலத்தில் அந்தந்த மதத்திற்குரியரானபிட்சுக்களும், தீர்த்தங் கரர்களும், ஆச்சாரியர்களும், ஆழ்வார்களும், அடியார்களும் செல்வாக்குடன் மக்களிடையே பழகுவாராயினர். இம்முறை யிற்ருன் மகேந்திர பல்லவனுல் முதலில் கொள்ளப்பட்ட சமண சமயத்தைச் சைவ மரபில் தோன்றிய திருநாவுக்கரசர் சார்ந்து, தருமசேனர் என்ற தலைமை இடத்தையும் பெற்றுச் சிறந் திருந்தார். பின்னர், காலத்தின் கோலத்தால் அருகக் கடலி னின்றும் கரையேறிய அப்பர் மீட்டும் சைவ நலச் செல்வராய்த் திகழ்ந்தார். நிலைமாறிய நாவுக்கரசரை மற்றைய சமணர்கள் கொல்லச் சூழ்ச்சி செய்தனர். பல்லவ மன்னனிடம் சென்று அவர்மீது பழி தூற்றினர். அப்பொழுது அரசன் அருக சம யத்தில் சரியாகப் படிந்திருந்தான். எனவே, திகம்பரர் இட்ட திட்டங்களை நாவுக்கரசர் மீது நிறைவேற்றத் தொடங்கினுன். வீரர்களை அனுப்பி நாவுக்கரசரை அழைத்துவரச் செய்து நீற்றறையில் இட்டான்; விடமூட்டிய உணவை அருந்தச் செய் தான்; யானையைக் கொண்டு கொல்லவும் முற்பட்டான்; இறுதியில் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலும் தள்ளினுன். இக்கொடுமைகளை எல்லாம் சமண சமயத்தைச் சார்ந்திருந்த அழுத்தத்தினுலேயே மகேந்திரவர்ம பல்லவன் செய்தான்.

இறுதியில், சைவம் தழைக்க நாவுக்கரசர் வென்ருர். சிவ நெறியின் உண்மை நலத்தினைக் கண்ணுற்ற பல்லவனும்

சைவனானன். முன்பு சமணச் சார்பிலிருந்து சைவர்க்குத் தீங்கிழைத்தபடியே அவன் சைவ நலங் கொண்டதும், முதலில் தம்மால் சிறப்பாகப் போற்றி வளர்க்கப்பட்ட பாதிரிப்புலியூர் சமணக் கல்லூரியை ஒழித்தான். சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் அழித்தான். அவற்றைக்கொண்டு திருவதிகையில் குணதர ஈச்சரம் என்று தன் பெயரால் சிவன் கோயிலும் கட்டினான் (இந்நிகழ்ச்சியினைச் சைவ சமய நூலாகிய பெரிய புராணம் எடுத்துக் காட்டுகிறது) சோழ நாட்டின் தலை நகரங்களுள் ஒன்றான உறையூரை அடுத்து நிற்கும் குன்றில் சிறப்புடன் வாழ்ந்த சிரா என்னும் சமணப் பெரியாரின் சிராப் பள்ளியாகிய குகையை மகேந்திரவர்மன் சிற்பக் குகையாக அமைத்திருந்தான். அக்குடை வரையை மீட்டும் சிவனுக் குரிய தாக்கினான். சமணப் பயிரை வளர்த்த பல்லவ நாடு, அதைச் சாய்த்தொழிக்கத் தொடங்கியது. இந்நிலை சமணர் கட்குப் பெரும் தொல்லையாக அமைந்தது. எனவே அவர்கள் பல்லவ நாட்டினின்றும் பாண்டிய நாட்டிற்கு மிகுதியாகச் சென்று வாழ்வாராயினர்.

கி. பி. 640 முதல் 680 வரை, பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் மாறவர்மன் அரிகேசரி தேவராவர். இவனை, சுந்தர பாண்டியன் எனவும் கூன் பாண்டியன் எனவும் திருவிளையாடற் புராணம் கூறுநிற்கும். மதுரைக்குத் தெற்கே ஐந்து கல் தொலைவில் உள்ள மலையினைத் தலைமையிடமாகக் கொண்டு அருகி வாழ்ந்த சமணருடன் பெருகிய சமணர் பாண்டியனுடைய ஆதரவையும் பெற்று வாழ்வாராயினர். அத்துடன் அவர்கள் தமது தவக்கோலத்தாலும், கலைவன்மையாலும் பாண்டியனையும் சமணனாக்கிக் கொண்டனர். இத்திறத்தால், பல்லவ நாட்டினின்றும் உயிருக்கு அஞ்சியோடிய சமணக் கூட்டத்தினருக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படலாயிற்று. திகம்பரர்கள் வாழ்ந்த மலைகளில் அவர்களுடைய வழிபாட்டிற்கேற்பத் தீர்த்தங்கரர்களின் உருவங்களோடு கூடிய குடைவரைகளும் இயற்கைக் குகைகளில் கற்படுக்கைகளும் சமணக் கலைவல்லுநர் அமைப்பாராயினர். கற்படுக்கைகளில் அவ்வவர்க்குரிய பெயரும் பொறிக்கப்பட்டன. சமண முனிவர்களும் கலைஞரும் பெருமிதத்துடன் சிறப்பாக அங்கு வாழ்வாராயினர். எனவே மக்களும் அம்மலையைச் 'சமணர் மலை' என்றே சிறப்பித்து அழைப்பாராயினர்.

சமணர் மலையில் உள்ள குகையில், குணசேன தேவர், ஆச்சாரியன் ஸ்ரீ பாலன், காவிதிப்பட்டம் பெற்ற அரையங் காவிதி, சங்க நம்பி, குகைவீரப் பெரியடிகள், வர்த்தமான பண்டிதர், பாலமூலத்தான் என்னும் பெயர்களைப் பெற்ற சமண முனிவர் வாழ்ந்தனரென்பதைக் கற்படுக்கைகளிலுள்ள கல்வெட்டுக்களால் அறியலாம்.

இந்நிலையில், பாண்டியன் அரிகேசரி தேவருடைய மனைவியாகிய மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையாரும், சைவம் தழைக்க ஆவன புரிவாராயினர். அப்பொழுது சோழ நாட்டில் சைவ நலச் செல்வராய்த் திகழ்ந்த திருஞான சம்பந்தரின் புகழ் பாண்டிய நாட்டிலும் பரவியது. அரசியாரும் அமைச்சரும் செய்த முயற்சியால் சம்பந்தர் மதுரைக்கு அழைக்கப்பட்டார். அதையறிந்த சமணர், சம்பந்தரும் சிவனடியார்களும் தங்கியிருந்த மடத்திற்கே தீயிட்டனர். இக்கொடுமையினின்றும் தப்பிய சம்பந்தர், கூன்பாண்டியனுடைய அவையில், சமணர் எண்ணாயிரவரின் சார்பாக நின்ற சமணப் பெரியார்களின் விருப்பப்படி அனல் வாதமும் புனல் வாதமும் செய்து வெற்றி பெற்றார். சமணம் நிலையிழந்தது. பாண்டியனும் சம்பந்தரின் அடியவருள் ஒருவனானன். பல்லவ நாட்டினின்றும் பயந்தோடிவந்த சமணருக்குப் பாண்டிய நாடு பாயும் வேங்கையானது. பல ஆயிரம் சமணர்கள் அரசனுடைய ஆணையால் கழுவேற்றப்பட்டனர். எஞ்சிய திகம்பரரும் சமணத் தொண்டரும் உயிருக்கு அஞ்சி ஓடினர். இக்காலத்திற்றான் சைவ வைணவ சமயங்கள் செல்வாக்குப் பெறலாயின வென்றும், சமணம் மங்கியதால் சமணருள் சிலர் சைவவைணவங்களில் சேர்ந்துகொண்டனரென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

பாண்டியன் அவையில் திருஞான சம்பந்தர் சமணரோடு வாதிட்டபொழுது, சந்துசேனர் தருமசேனர் கந்துசேனர் கனகசேனர் என்னும் சமண மதத் தலைவர்களும், கனகநந்தி புட்பநந்தி பவணநந்தி குமணநந்தி மாசுனகநந்தி குணகநந்தி திவணநந்தி என்னும் பெயர்களை உடைய, வாதிலும் மந்திரங்களிலும் வல்ல சமண முனிவர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதை, சம்பந்தர் பாடியுள்ள திருவாலவாய்ப் பதிகத்தால் நன்கு அறியலாம்.

அக்காலத்தில் சோழநாட்டின் தென்பகுதி, ஒருகால் பாண்டியராட்சியிலும், ஒருகால் பல்லவர் ஆட்சியிலும் சிக்கித் தத்தளித்தது. சங்ககாலந் தொட்டுக்குன்றின் மேல் இட்ட விளக்கெனத் திகழ்ந்த சோழர் பேரரசு, குடத்தினுள் இட்ட விளக்கென மங்கிப் பழையாறை ஆயிரந்தளியில் அடங்கிக் கிடந்தது. பாலை வனத்தில் நிற்கும் சிறிய சோலையைப் போன்று, புதுக்கோட்டை சீமையைச் சேர்ந்த கொடும்பாளூர் வெள்ளனூர் ஆகிய பகுதிகளைத் தலைமையிடமாகக் கொண்டு, இருக்குவேளிர் என்னும் மரபினையுடைய குறுநில மன்னர் பல்லவப் பேரரசின் கீழிருந்து ஆண்டு வந்தனர்.

பல்லவ பாண்டிய நாடுகளில் வாழ்விட மில்லாது அலைந்த சமணத் துறவிகள், பாண்டிய நாட்டிற்குக் கிழக்கும் பல்லவர்க் குட்பட்ட சோணாட்டிற்குத் தெற்குமாக அமைந்திருந்த

எல்லைப் பகுதிகளில் உள்ள காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் தஞ்சம் புகுந்து வாழ்வாராயினர். இருக்குவேளிரின் ஆட்சிக் குட்பட்டிருந்த அப்பகுதியிலுள்ள சிற்றண்ணல் வாயில் செட்டிப்பட்டி நாரத்தமலை தேனிமலை ஆகிய இடங்களில் அஞ்சினன் புகலிடமாக அவர்கள் தங்கியதோடு, இருக்குவேளிரின் ஆதரவையும் ஓரளவு பெற்றனரென்றே கொள்ளலாம்.

சமண சமயம் பல்வேறுபட்ட ஆறுகள் வந்தடையும் ஆழ்கடல் போன்ற அமைப்புடையது. ஆகவே, தமிழகத்தில் இடங்கொண்ட இச்சமய நெறியில் பல்வகைச் சாதிகளினின்றும் வந்தடைந்தவர்களான தமிழ் மக்களே சமணத் துறவியராகவும் சமணராகவும் இருந்தனர். அவர்களுள் சிலர், குலத்தொழிலாக வந்த சிற்பக்கலை வல்லுநராகவும் ஓவியத் துறையில் சிறந்தாருமாக இருந்தனர். இத்துறவிகள் மேற்கொண்டொழுகிய கற்றல், ஓதுதல், தவமியற்றல் ஆகிய நற்பண்புகளுடன் தத்தமக்குரிய குலத்தொழிலையும் வளர்த்து வந்தனர்.

சமணரின் தொண்டு:

பிறப்பினால் உயர்வு காணும் ஆரிய மதக் கொள்கை சமணத்தில் இல்லை. சமணர் உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி, கலைவளர்ச்சி ஆகிய துறைகளில் தொண்டு செய்வதையே பேரறமாகக் கருதினர். இம்முறையிற்றான், தமிழகத்தில் கி. மு—300 முதல் கி. பி.—300 வரை நிகழ்ந்ததாக ஆராய்ச்சியாளர் கூறும் கடைச்சங்க காலத்தில் சமணச் சார்புடைய தமிழறிஞர் பலர் வாழ்ந்திருக்கின்றனர். மக்களுக்குத் தொண்டு செய்யும் மனநிலையை வளர்க்கும் சமணசமயக் கொள்கைகள் தமிழக மக்களாலும் போற்றப் பெற்றன. எனவேதான், இளங்கோவடிகள் போன்றோர் துறவறம் மேற்கொண்டகாலை சமணசமயக் கொள்கைவழிச் சார்வாராயினர். இளங்கோவடிகள் கண்ணகியின் வரலாற்றைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ள சிலப்பதிகாரம் என்னும் நூலினுள், அடைக்கலம் வந்தவரைக் காப்பாற்றும் நீதியை, கவுந்தியடிகள் என்னும் சமண சமயப் பெண்துறவி மாதரி என்னும் ஆயர்குல மகளுக்கு, "தவத்தோர் அடைக்கலம் தான் சிறிதாயினும் மிகப்பேரின்பம் தருமது கேளாய்" என்று எடுத்துக் கூறும் வாய்ப்பாக கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தோடு வைத்து எண்ணப்படும் மணிமேகலை என்னும்நூல் சமணமதக் கோட்பாடுகளோடுபெரிதும் ஒன்றிய பௌத்தமதக் கொள்கைகளின் வழியே அமைந்தது. மணிமேகலை அமுத சுரபி என்னும் தெய்வத் தன்மை வாய்ந்த உணவுக்கலத்தினால் நாடெங்கும் பசிப்பிணி போக்கிய நல்லறம் இந்நூலுள் சிறப்பாக விளக்கப்பட்டது. காடுகளிலும்

மலைகளிலும் தமது வாழ்க்கையை மேற்கொண்டொழுகும் இயல்புடைய சமணத்துறவிகள், ஆங்காங்கு இயற்கையிற் கிடைக்கும் மூலிகைகளையும், பொருள்களையும் ஆராய்ந்தறிந்து மக்களுக்கு உண்டான நோய்களுக்கு ஏற்ற மருந்துகளைச் செய்து பொதுமக்களுடைய பிணியைத் தீர்த்து வந்தனர். சமண மதத் துறவிகள் அரிதில் முயன்று ஆராய்ந்து கண்ட மருந்துகள் சமண மதத்தில் வழிவழி வந்த மாணாக்கராலும் சாரணராலும் வளர்க்கப்பட்டு வந்தன. அவைகளே 'சித்தர் மருத்துவம்' (சித்தர்—சமணர்) என்ற சிறப்புப் பெயருடன் இன்றும் தமிழகத்தில் போற்றப்பட்டு வருகின்றது.

சமண முனிவர்கள் வாழ்ந்த இடம் 'பள்ளி' என்றழைக்கப் பட்டது. அங்கிருந்து அவர்கள் நாளும் ஊரிலுள்ள பிள்ளை கட்கு எழுத்துக்களையும் அறநூல்களையும் கற்பித்து வந்தனர். அதனால் அக்காலப் பிள்ளைகள் படித்த இடம் 'பள்ளிக்கூடம்' என்றழைக்கப்பட்டது. அப்பெயர் நிலைத்து இன்றளவும் வழக்கிலுள்ளது. சமண ஆசிரியர்கள் மாணவர்கட்குப் பாடஞ்சொல்லும் முறையை வகுத்து, அவ்வழியே சமயக் கொள்கைகளையும் பரப்பினர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அடிப்படையான முயற்சிகளுள் இலக்கண இலக்கிய நிகண்டு நூல்களைச் செய்துவைத்தனர். சமணச் சிற்பியர், தனிக் கூடங்கள் அமைத்து தான் நாளும் முயன்று கண்ட சிற்பக்கலை நுட்பங்களை மாணவர்கட்குப் பயிற்றுவித்து வந்தனர். சமண ஓவியர் பச்சிலைகளைக் கொண்டும் வண்ணக்கற்களைக் கொண்டும் சிறந்த வண்ணங்களைக் கண்டு, அவ்வழியே என்றும் நிலையில் குன்றாத அழகிய ஓவியங்களை எழுதும் முறையை வளர்ப்பாராயினர்.

வேதகால ஆரியர் மேற்கொண்டுவந்த பலியிடல் ஊன் உண்ணல் ஆகியவற்றைச் சமணர் வெறுத்தனர். கொல் லாமை ஊன் உண்ணாமை ஆகிய இரண்டு கொள்கைகளையும் தமிழகத்தில் சமணரே வற்புறுத்திய வராவர். இவ்வறவழி சமண சமயத்தில் சிறப்பாக விளங்கியது.

இவ்வாறு, ஆரிய வேத சமயக் கொள்கைகளை வெறுக்கும் அறவுரைகளைச் சமண சமயம் மேற் கொண்டதினாலேயும், மக்களுக்குத் தொண்டு செய்யும் ஒரே கடப்பாட்டில் சலியாது நின்று, பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்று நாளும் வளர்ந்தமையாலும், ஆரிய சமயம் சமணத்திற்கு நேர்பகை யாகி அதைக் காலப்போக்கில் அழிக்கவும் தலைப்பட்டு வெற்றி கண்டது.

(தொடரும்)